Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

# தமிழ் Mirror

www.tamilmirror.lk

FRIDAY, DECEMBER 24, 2021

வெள்ளிக்கிழமை டிசெம்பர் 24, 2021 | ஒளி: 07 கதிர்: 187 | பக்கம்:08 | நகரப்பதிப்பு★ | விலை ரூ.10

## பசிலுக்கு எதிராக விஜயதாஸ வழக்கு



பசில் ராஜபக்‌ஷவை, நிதி அமைச்சராக ஏற்றுக்கொள்ள முடியாதெனத் தெரிவித்த ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் தேசிய பட்டியல் பாராளுமன்ற உறுப்பினர் விஜயதாஸ ராஜபக்‌ஷ, பசில் ராஜபக்‌ஷ, நிதியமைச்சராக இருப்பது சட்டவிரோதமானது எனவும் தெரிவித்தார்.

இது தொடர்பில் மேலும் தெரிவித்த அவர், பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டு நிறைவேற்றப்பட்ட 2022ஆம் ஆண்டுக்கான வரவு- செலவு திட்டத்துக்கு வாக்களிப்பதில் எனக்குப் பிரச்சினை இருந்தது. அரசியலமைப்புக்கு முரணாகவே இந்த வரவு-செலவுத் திட்டம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது என்றார்.

தொடர்ச்சி P2

தமிழ் பேசும் கட்சிகளின் கூட்டத்தில் பங்கேற்க

# அழைத்தால் பங்கேற்போம்

## இ.தொ.கா.வின் நிலைப்பாட்டை அறிவித்தார் ஜீவன்



**அழைப்பு விடுக்கப்படாமைக்கு அரசியலும் காரணமாக இருக்கலாம். ஆறுமுகன் தொண்டமான் காலத்திலிருந்தே சம்பந்தன் ஐயாவுடன் எமக்கு தொடர்பு**

**எமக்கு அழைப்பு விடுக்கப்படாவிட்டாலும் கூட பெரும்பாலானோர் ஓரணியில் இணைந்துள்ளமை மகிழ்ச்சி**

எஸ்.கணேசன்

இலங்கை தொழிலாளர் காங்கிரஸூக்கு அழைப்பு விடுக்கப்படும் பட்சத்தில், தமிழ்பேசும் கட்சிகளின் ஒன்றிணைந்த கூட்டத்தில் காங்கிரஸ் கட்டாயம் பங்கேற்குமென இ.தொ.காவின் பொதுச்செயலாளரும், இராஜாங்க அமைச்சருமான ஜீவன் தொண்டமான் தெரிவித்தார்.

கொட்டகலை சி.எல்.எவ் வளாகத்தில் நேற்று (23) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போது, "தமிழ் பேசும் கட்சிகளின் கூட்டத்தில் பங்குபற்றுவதற்கு இலங்கைத் தொழிலாளர் காங்கிரசஸூக்கு அழைப்பு விடுக்கப்பட்டதா?" எனக் கேட்கப்பட்ட கேள்விக்கு பதிலளிக்கையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

தொடர்ச்சி P2

## வன்முறைக் கும்பல் கோண்டாவிலில் அட்டகாசம்



எம்.றொசாந்த்

கோண்டாவில் இராமகிருஷ்ண மகா வித்தியாலயத்துக்கு அண்மையாக உள்ள வர்த்தகரின் வீட்டு வளாகத்துக்குள் புகுந்த கும்பல், அட்டூழியத்தில் ஈடுபட்டுள்ளது.

தொடர்ச்சி P2

விவசாயத்துறை அமைச்சின் செயலாளர்களை

## சங்கீத கதிரையை போல மாற்றுகின்றது அரசாங்கம்



**25 மாதங்களில் நால்வர் மாற்றப்பட்டுள்ளனர்**

விவசாயத்துறை அமைச்சின் செயலாளர்களை, சங்கீத கதிரையைப் போல அரசாங்கம் மாற்றிக்கொண்டே இருக்கிறது எனக் குற்றஞ்சாட்டிய ஐக்கிய மக்கள் சக்தியின் மாத்தளை மாவட்ட பாராளுமன்ற

தொடர்ச்சி P2

## நாட்டை அழித்த கூட்டாளிகளுடன் கூட்டணி அமைக்க மாட்டோம்



அரசியல் கட்சிகள் கூட்டணி அமைப்பது தவறல்ல எனத் தெரிவித்துள்ள ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா, நல்லாட்சியின் போது, இந்த நாட்டை அழிக்க தலைமை தாங்கியவர்களுடன் கூட்டணி அமைக்க நாம் தயாரில்லை என்றார்.

தொடர்ச்சி P2

## ஜே.வி.பியுடன் சு.கவுக்கு இணைய முடியும்



ஊழலற்ற, மக்கள் விடுதலை முன்னணியுடன் (ஜே.வி.பி) இணைந்து செயற்படுவதற்கு ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சிக்கு முடியுமென அதன் பொதுச் செயலாளர் தயாசிறி ஜயசேகர தெ

தொடர்ச்சி P2

சீன உர விவகாரம்

## தடை உத்தரவு மீண்டும் நீடிப்பு



பசளையைக் கொண்டுவந்த சீன நிறுவனத்திற்கு கட்டணம் செலுத்துவதை தடுத்து, மக்கள் வங்கி மற்றும் உள்ளூர் கப்பல் நிறுவனத்துக்கு எதிராக விதிக்கப்பட்ட தடை உத்தரவு, 2022 ஜனவரி மாதம் 06 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2

உழைக்கும் மக்கள் அனைவரும்

## வீதிக்கு இறங்க வேண்டும்



எஸ். நிதர்ஷன்

பெரும் பஞ்சம் ஏற்படக்கூடிய அபாயக் கட்டத்தை நோக்கி, இலங்கை நகர்வதை அவதானிக்கக் கூடியதாக உள்ளது எனத் தெரிவித்த புதிய ஜனநாயக மாக்சிச லெனினிசக் கட்சியின் பொதுச் செயலாளர் சி.கா.செந்திவேல், இதனால் பாதிக்கப்படும் சாதாரண

தொடர்ச்சி P2

## பதவி நீக்கத்துக்கு பஞ்சமா காரணம்



**ஜனாதிபதியிடம் விளக்கம் கேட்டார் ருவன்**

அடுத்த வருடம் நாட்டில் பஞ்சம் ஏற்படபோகிறது என்ற உண்மையை நாட்டுக்குக் கூறியமையாலா, விவசாய அமைச்சின் செயலாளர் பதவி நீக்கப்பட்டுள்ளார் என்பதை நாட்டு மக்களுக்கு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்‌ஷ உடனடியாக வெளிப்படுத்த வேண்டும் என ஐக்கிய தேசிய கட்சியின் பிரதித் தலைவர் ருவன் விஜேவர்தன கேட்டுக்கொண்டார்.

தொடர்ச்சி P2



## ஏழுமலையானை இன்று தரிசனம் செய்கின்றார் பிரதமர் மஹிந்த

இந்தியாவுக்கு தனிப்பட்ட விஜயமொன்றை மேற்கொண்டு, கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்திலிருந்து நேற்றுக்காலை புறப்பட்டுச் சென்ற, பிரதமர் மஹிந்த ராஜபக்‌ஷ, நேற்று (23) நண்பகல் 12 மணியளவில் திருப்பதியைச் சென்றடைந்தார்.

தொடர்ச்சி P2




## விலையேற்றத்தை எதிர்த்து...

எரிபொருள், அத்தியாவசியப் பொருட்களின் விலைகள் அதிகரிப்பை எதிர்த்தும் அதிகரிக்கப்பட்ட விலையைக் குறைக்குமாறு கோரியும், மக்கள் விடுதலை முன்னணி (ஜே.வி.பி) 20 பிரதான நகரங்களில் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களை நேற்று (23) முன்னெடுத்திருந்தது. கேகாலை நகரில் முன்னெடுக்கப்பட்ட ஆர்ப்பாட்டம் இது. (படம்: என். ஆராச்சி)

## நாட்டில் பலருக்கும் ஒமிக்ரான் இருக்கலாம்



தற்போது நாட்டில் இனங்காணப்பட்டுள்ள ஒமிக்ரான் வைரஸ் தொற்றாளர்களை பார்க்கும்போது, நாட்டில் பலருக்கும் ஒமிக்ரான் தொற்று இருக்கலாம் என்பது தெளிவாகத் தெரிவதாக பொதுச் சுகாதார பரிசோதகர்கள் சங்கம் எச்சரித்துள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரிவித்த அச்சங்கத்தின் தலைவர் உபுல் ரோஹன, ஒமிக்ரான் வைரஸ் தொற்றுடன் நாட்டில் மேலும் மூவர்

தொடர்ச்சி P2



## அடுப்பு வெடித்ததில் இளைஞனுக்கு எரிகாயம்

எஸ்.சதீஸ்

மஸ்கெலியா, நல்லதண்ணி- சிவனொளிபாத மலைக்கு அருகிலுள்ள வர்த்தக நிலையமொன்றில் சமையல் எரிவாயு அடுப்பு வெடித்தில் படுகாயமடைந்த இளைஞன் மஸ்கெலியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு,

தொடர்ச்சி P2

## மூன்றரை மாத குழந்தை மரணம்

மூச்சுத்திணறல் காரணமாக மூன்றரை மாத குழந்தையொன்று உயிரிழந்துள்ள சம்பவமொன்று, யாழ். இணுவில் தெற்கில் இடம்பெற்றுள்ளது.

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

# பசிலுக்கு எதிராக விஜயதாஸ வழக்கு

நிதி அமைச்சராக பசில் ராஜபக்ஷவை நான் ஏற்றுக்கொள்ளமாட்டேன். இந்நாட்டின் சட்டத்தின் பிரகாரம், அவரை நிதி அமைச்சராக ஏற்றுக்கொள்ள முடியாது என்றார்.

இலங்கை சுதந்திரமடைந்த 1948ஆம் ஆண்டு அப்போதைய பிரதமர் டி.எஸ்.சேனாநாயக்க குடியுரிமை சட்டத்தை கொண்டுவந்தார். இதில் 24ஆவது உறுப்புரிமையில், இலங்கையில் குடியுரிமையை பெற்ற எவரும் வேறொரு நாட்டில் அரசியலமைப்பின்படி உறுதிமொழி ஏற்றிருந்தால், அவர்களது குடியுரிமை இரத்து செய்யப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

பசில் ராஜபக்ஷ அமெரிக்கக் குடியுரிமையை கொண்டுள்ளார். அமெரிக்காவில் குடியுரிமையை பெறுவதென்றால் அந்நாட்டு நீதிமன்றத்தின் முன்பாக உறுதிமொழி ஏற்க வேண்டும்.

இதன்போது மூன்று படிநிலைகள் காணப்படுகின்றன. முதலாவது, குறித்த நபர் அதற்கு முன்னர் குடியுரிமையை பெற்றிருந்த நாட்டின் அனைத்துத் தொடர்புகளும் இரத்தாகும். இரண்டாவது உறுதிமொழியை ஏற்பவர்கள், அமெரிக்காவின் அரசியலமைப்பை பாதுகாக்க வேண்டும். மூன்றாவதாக, அமெரிக்க அரசுக்காக ஆயுதமேந்த வேண்டுமென அழைப்பு விடுக்கப்படும் எந்தவொரு நேரத்திலும் ஆயுதமேந்தி அந்நாட்டுக்காகப் போராடத் தயாராக இருக்க வேண்டும்.

இது அமெரிக்காவுக்கான விசேட சட்டம். 1952ஆம் ஆண்டு இச்சட்டம் அமெரிக்காவில் கொண்டுவரப்பட்டாலும், இலங்கையில் 1948ஆம் ஆண்டே வேறொரு நாட்டில் உறுதி மொழி ஏற்றுக்கொள்பவர்களின் குடியுரிமை இரத்தாகும் என சட்டம் கொண்டுவரப்பட்டுள்ளது.

அமெரிக்காவில் குடியுரிமையை பெற்ற பின்னரே பசில் ராஜபக்ஷ, இலங்கையில் தன்னைப் பதிவு செய்துகொள்கிறார். இதனூடாக அமெரிக்கா அரசுக்கு வழங்கிய உறுதிமொழியின்படி, இலங்கையின் அரசியலமைப்பை பசில் ராஜபக்ஷ மீறியுள்ளார்.

ஒரு நபருக்கு இரு நாடுகளின் அரசியலமைப்புகளைப் பாதுகாக்க முடியுமென உறுதிமொழி வழங்க முடியாது. 20ஆவது திருத்தச் சட்டத்தில் இரட்டை குடியுரிமை இரத்துச் செய்யப்பட்டாலும், குடியுரிமைச் சட்டம் தற்போது நாட்டில் நடைமுறையில் உள்ளது. எனவே பசில் ராஜபக்ஷவை நிதி அமைச்சராக ஏற்றுக்கொள்வது சட்டவிரோதமானது. அவ்வாறு இருக்கும்போது, நிதி அமைச்சுப் பொறுப்பை எவ்வாறு பசிலால் ஏற்க முடியும்? இது தொடர்பில் நான் வழக்கு ஒன்றை மேன்முறையீட்டு நீதிமன்றில் தாக்கல் செய்துள்ளேன் எனவும் கூறினார்.

மேலும், இவற்றை எல்லாம் தெரிந்துகொண்டே நான் 20ஆவது திருத்தச் சட்டத்துக்கு ஆதரவாக வாக்களித்தேன். எனினும் அப்போது இது தொடர்பில் நான் கூறியிருந்தால் குடியுரிமைச் சட்டம் திருத்தப்பட்டிருக்கும் என்பதால் நான் இதனை இரகசியமாக வைத்திருந்தேன் எனவும் கூறினார்.

# அழைத்தால் பங்கேற்போம்

இது தொடர்பில் ஜீவன் தொண்டமான் மேலும் கூறியவை வருமாறு:

"இலங்கை தொழிலாளர் காங்கிரஸுக்கு இன்று வரையிலும் அழைப்பு விடுக்கப்படவில்லை. அதற்கு அரசியலும் காரணமாக இருக்கலாம். சம்பந்தன் ஐயா மூத்த அரசியல்வாதி. அவரை நாம் மதிக்கின்றோம். மறைந்த தலைவர் அமரர் ஆறுமுகன் தொண்டமான் காலத்திலிருந்தே அவருடன் எமக்கு தொடர்பு இருந்தது" என்றார்.

"எமக்கு அழைப்பு விடுக்கப்படும் பட்சத்தில் அந்த வேலைத்திட்டத்தில் பொதுநலன் இருப்பின் பங்கேற்போம். எமக்கு அழைப்பு விடுக்கப்படாவிட்டாலும்கூட பெரும்பாலானோர் ஒரணியில் இணைந்துள்ளமை மகிழ்ச்சி" என்றார்.

## தடை உத்தரவு...

இந்த தடை உத்தரவை நீக்குவதா? இல்லையா? என்பது தொடர்பில் எதிர்வரும் 06 ஆம் திகதி அறிவிப்பதாக, கொழும்பு வணிக மேல் நீதிமன்றம் நேற்று (23) தீர்மானித்துள்ளது.

நீதிபதிகளான பிரதீப் ஹெட்டியாரச்சி, பிரியந்த பெர்னாண்டோ ஆகியோர் முன்னிலையில் இந்த வழக்கு நேற்று (23) பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போதே தடை உத்தரவை நீடிக்கப்பட்டு, மேற்கண்ட உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

சீனாவின் ஜிந்தாவோ சீவிங் நிறுவனத்தினால் கொண்டுவரப்பட்ட சேதனப் பசளையில் தீங்கிழைக்கக்கூடிய பக்டீரியாக்கள் கண்டுபிடிக்கப்பட்டமையால், அதனை நாட்டுக்குள் அனுமதிக்கக்கூடாதென, வரையறுக்கப்பட்ட உர நிறுவனமும் கொமர்ஷல் உர நிறுவனமும் இந்த வழக்கை கொழும்பு வணிக மேல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருந்தன.

சீன உர நிறுவனத்தின் உள்ளூர் நிறுவனத்திற்கு கடன் கடிதத்துக்கான கட்டணத்தை செலுத்துவதை தடுத்து, கொழும்பு வணிக மேல் நீதிமன்றத்தினால் தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

## வீதிக்கு இறங்க...

பட்டினிச் சாவுகளை எதிர்கொள்ளும் அபாய நிலைக்குத் தள்ளப்படுவர் என, நேற்று (23) விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டிருப்பதாவது: இன்றைய மோசமான விலை உயர்வுகளாலும் பொருட்களின் தட்டுப்பாடுகளாலும் பாதிக்கப்பட்டுவரும் உழைக்கும் மக்கள் அனைவரும், வீதிக்கு இறங்க வேண்டிய தருணம் வந்துள்ளதாகவே புதிய ஜனநாயக மாக்சிச லெனினிசக் கட்சி நம்புகிறது.

இன்றைய ஆட்சியாளரின் மக்கள் விரோதப்போக்கினைத் தட்டிக் கேட்கவும் தடுத்து நிறுத்தவும் மக்களின் ஒன்றுபட்ட போராட்ட அணிதிரள்வால் மாத்திரமே முடியும் என்பதே வரலாறு உணர்த்தும் பாடமாகும்.

நாட்டின் இன்றைய மோசமான பொருளாதார வீழ்ச்சிக்கும் சமூக நெருக்கடிகளுக்கும் இன, மத, பிரதேச பிளவுகளுக்கும் காரணமானவர்கள் ஆளும்தரப்புகளாக இருந்துவந்த சந்தர்ப்பங்களில் எல்லாம் குறுக்கு வழிகளில் சேர்த்த பல்லாயிரம் கோடி டொலர், இன்றைய அந்நியக் கடன்களை மீளச் செலுத்தவும் டொலர் கையிருப்புக்கும் போதுமானதாகும்.

எனவே, உழைக்கும் மக்களின் கைகளுக்கு அதிகாரம் வரக்கூடியதாக, மக்கள் சார்பான பரந்துபட்ட சக்திகள் ஒன்றிணைந்து போராட்டங்களை முன்னெடுப்பதையே சரியான தீர்வுக்கான வழியாக எமது கட்சி வலியுறுத்துகிறது.

## ஏழுமலையானை...

விமானம் மூலம் ரேணிகுண்டா விமான நிலையத்தை வந்தடைந்த அவரை சித்தூர் கலெக்டர் ஹரி நாராயணன் மற்றும் திருப்பதி தேவஸ்தான அதிகாரிகள் வரவேற்றனர்.

தனது பாரியார் ஷிரந்தி ராஜபக்ஷவுடன் சென்றிருக்கும் அவர், திருமலையில் உள்ள கிருஷ்ணா நிவாஸ் விருந்தினர் மாளிகையில் நேற்றிரவு ஓய்வெடுத்தார்.

இன்று (24) காலை வி.ஐ.பி பிரேக் தரிசனத்தில் ஏழுமலையானை தரிசனம் செய்கிறார். அவருக்கு திருப்பதி தேவஸ்தான அதிகாரிகள் லட்டு, சாமி படம் மற்றும் பிரசாதங்கள் வழங்குகின்றனர்.

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் வருகையையொட்டி திருப்பதி மற்றும் திருமலையில் பலத்த பொலிஸ் பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன என இந்தியச் செய்திகள் தெரிவிக்கின்றன.

## 'நாட்டில் பலருக்கும் ஒமிக்ரான் இருக்கலாம்'

இனங்காணப்பட்டுள்ளனர். இவர்களின் செயற்பாடுகளை வைத்துப் பார்க்கும்போது ஒமிக்ரான் வைரஸ் தொற்றுடன் பலர் நாட்டுக்குள் இருக்கக்கூடும் என்பது தெளிவாக தெரிகிறது என்றார்.

எனவே, அடுத்த மூன்று வாரங்களில் நாடுமுழுவதிலும் ஒமிக்ரான் வைரஸ் பரவி, ஒமிக்ரான் தொற்றாளர்கள் பிரதானமாக இனங்காணப்படக்கூடிய ஆபத்துக் காணப்படுகிறது எனவும் கூறினார்.

பிரதானமாக ஒமிக்ரான் தொற்றாளர்களின் எண்ணிக்கை அதிகரிக்குமாயின், நாடு மோசமான நிலைமைகளை சந்திக்கும் என்பதை நினைவில் கொண்டு, பண்டிகைகளை கொண்டாட வேண்டுமெனவும் அவர் கேட்டுகொண்டார்.

## கட்டணங்களை அதிகரிக்க இரகசியப் பேச்சு

மின்சாரம் மற்றும் தண்ணீர் ஆகிய இரண்டுக்கான கட்ட ணங்களை அதிகரிப்பதற்கு அரசாங்கம் இரகசிய பேச்சுவார்த்தையில் ஈடுபட்டுள்ளதென தகவல்கள் வெளியாகியுள்ளன.



எனினும், மின்சார கட்டணத்தை அதிகரிப்பது தொடர்பில் இதுவரையிலும் எவ்விதமான தீர்மானமும் எட்டப்படவில்லையென மின்சக்தி அமைச்சின் தகவல்கள் தெரிவிக்கின்றன.

"மின்சாரக் கட்டணம் அதிகரிக்குமாயின், தண்ணீர் கட்டணத்தையும் அதிகரிப்பதற்கு கவனம் செலுத்தப்படும்" என நீர்வழங்கல் அமைச்சர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்தார்.

அதிகரிக்கப்படும் கட்டணங்களை, குறைந்த பாவனையாளர்களிடம் இருந்து அறவிடாது. கூடுதலாகப் பயன்படுத்துவோரிடமிருந்து அறவிடும் வகையில், கட்டணங்களில் திருத்தங்கள் மேற்கொள்ளப்படுமென அமைச்சர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

## பதவி நீக்கத்துக்கு...

இது தொடர்பில் மேலும் தெரிவித்த அவர், சேதன பசளை திட்டத்தை அவசரமாக நடைமுறைப்படுத்தியமையால் நெல், ஏனைய பயிர்களின் உற்பத்தி 75 சதவீதமாக குறைவடைந்துள்ளது என விவசாய அமைச்சின் செயலாளர் உதித் கே.ஜயசிங்க தெரிவித்திருந்தார். இதனை கூறிய 24 மணித்தியாலங்களுக்குள் ஜனாதிபதியால் அவர், பதவி நீக்கம் செய்யப்பட்டுள்ளார் என்றார்.

நாட்டின் உண்மை நிலையை எடுத்துக்கூறும் அரச ஊழியர்களின் குரல் வளைகள் நசுக்கப்படும் என்பதையே ஜனாதிபதியின் செயற்பாடுகள் எடுத்துக்காட்டுவதாக தெரிவித்த அவர், ஜனாதிபதியின் இவ்வாறான செயற்பாடுகளால் அரச ஊழியர்கள் மனசோர்வடைவதாகவும் கூறினார்.

## மூன்றரை மாத...

நேற்று முன்தினம் (22) அதிகாலை தாய்ப்பால் குடித்துக்கொண்டிருந்த குழந்தைக்கு திடீரென மூச்சுத்திணறல் ஏற்பட்டுள்ளது. இதனையடுத்து, யாழ். போதனா வைத்தியசாலைக்கு குழந்தையை பெற்றோர் உடனடியாக கொண்டு சென்றுள்ளனர்.

இந்நிலையில், குழந்தை ஏற்கெனவே உயிரிழந்துள்ளவிட்டதாக வைத்தியர்கள் தெரிவித்துள்ளனர். அதனையடுத்து, குழந்தையின் திடீர் மரணம் தொடர்பில், சுன்னாகம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## முட்டை விலை கூடாது: கோழி இறைச்சி குறையும்

இறக்குமதி வரியை அரசாங்கம் நீக்கியுள்ளதால், கோழி முட்டையின் விலை மேலும் அதிகரிக்காது என அகில இலங்கை கோழி முட்டை உற்பத்தியாளர் சங்கத்தின் தலைவர் சரத் ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

இதனால், முட்டையொன்று கோழிக்கான தீவன செலவும் குறைந்துள்ளது. இதேவேளை, முட்டையொன்று 23 ரூபாய் 50 சதத்துக்கு விற்பனை செய்யப்படுகின்றது.

அத்துடன், ஒரு கிலோ கிராம் கோழி இறைச்சியின் விலையை சுமார் 50 ரூபாயால் குறைப்பதற்கு எதிர்பார்த்துள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

தற்போது முட்டையொன்று 26 ரூபாய் முதல் 30 ரூபாய்க்கும், ஒரு கிலோ கிராம் கோழி இறைச்சி 800 ரூபாவிலிருந்து 900 ரூபாய் வரைக்குமம் விற்பனை செய்யப்படுகின்றது.

## வன்முறை கும்பல்...

அத்துடன், வீட்டின் முன்பாக நிறுத்திவைக்கப்பட்டிருந்த மோட்டார் சைக்கிளை எடுத்துச் சென்று, உப்புமடச் சந்தியில் போட்டு சேதப்படுத்திவிட்டுச் சென்றுள்ளது.

இந்தச் சம்பவம், நேற்று (23) அதிகாலை 5.15 மணியளவில், புன்னாலைக்கட்டுவன் சந்தியில் அலைபேசி வர்த்தக நிலையத்தை நடத்தி வருபவரின் வீட்டிலேயே, இடம்பெற்றுள்ளது.

3 மோட்டார் சைக்கிள்கள் மற்றும் ஓட்டோவில் வந்த வன்முறைக் கும்பல், இந்தத் தாக்குதலை மேற்கொண்டதாக, கோப்பாய் பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவம் தொடர்பில் கோப்பாய் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

## சங்கீத கதிரையைப்...

உறுப்பினர் ரோஹினி கவிரத்ன, கடந்த 25 மாதங்களில் நால்வர் மாற்றப்பட்டுள்ளனர் என்றார்.

திருட்டை மூடி மறைப்பதற்காகவே இவ்வாறு, செயலாளர்களை அரசாங்கம் மாற்றிக்கொண்டிருக்கின்றது என்றும் அவர் தெரிவித்த அவர், பதவி நீக்கப்பட்ட விவசாய அமைச்சின் செயலாளர் உதித். கே. ஜயசிங்க, தனது பதவிக் காலத்தில் முன்னெடுத்த தேசிய குற்றச்செயல்கள் தொடர்பான கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பில் முறையான விசாரணைகள் முன்னெடுக்கப்பட வேண்டுமென்ற கோரிக்கையையும் முன்வைத்தார்.

ஊடக அறிக்கையொன்றை வெளியிட்டே அவர் மேற்கண்டவாறு கோரிக்கையை முன்வைத்துள்ளார். அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

நாட்டுக்கு பெரும் நட்டத்தை ஏற்படுத்தி பாரிய நிர்வாக சீர்கேட்டை ஏற்படுத்திய அவரை பதவியிலிருந்து நீக்கியதன் மூலம் அரச ஊழியராக அவர் செய்த நிதிக்குற்றங்களை மூடி மறைக்க இயலாது எனத் தெரிவித்துள்ளார்.

முன்னாள் விவசாய அமைச்சின் செயலாளர் உதித் ஜயசிங்க தனது பாவங்களை எல்லாம் கழுவி விடுவதாக அறிவித்துள்ளதாகத் தெரிவித்த பாராளுமன்ற உறுப்பினர் ரோஹினி, இரசாயன உர நிறுவனங்களுக்காக நிதியை திரட்டும் திட்டத்துக்காகதான் அவர் விவசாய அமைச்சுக்கு நியமிக்கப்பட்டார் என்றார்.

அவர் ஒரு நிறுவனத்தின் முகவராக செயற்பட்டுள்ளார். முன்னாள் விவசாய அமைச்சின் செயலாளரான புஸ்பகுமாரவை நீக்கிவிட்டு நியமிக்கப்பட்ட உதித்.கே. ஜயசிங்க, நெனோ யூரியா- சீனாவின் மலம் ஆகிய இரண்டு தேசிய குற்றங்களை செய்துள்ளார்.

அத்துரலிய ரத்ன தேரர் மற்றும் வைத்தியர் அனுருத்த பாதெனிய ஆகியோருடன் சத்தியக்கடதாசியில் கையொப்பம் இட்டதாக தெரிவித்தாலும் இரசாயன உர இறக்குமதி நிறுவனங்களுக்காக செயற்பட்ட பிரதான நபர் இவராவார்.

விவசாய இரசாயனங்களுக்கு விதிக்கப்பட்டிருந்த தடை நீக்கப்பட்டு ஒரு மாதமே ஆகிறது. இதுவரை ஒரு விவசாய இரசாயனமும் இறக்குமதி செய்யப்படவில்லை என செயலாளர் கூறுகின்றார்.

எனவே, விவசாய அமைச்சில் முன்னெடுக்கப்படும் பாரிய கொடுக்கல் வாங்கல்கள், விலை மனு இல்லாத பொருள் இறக்குமதி என்பது தொடர்பிலும் விசாரணைகள் முன்னெடுக்கப்பட வேண்டும் என்றும் அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## நாட்டை அழித்த...

அவர்களுடன் மேடையில் ஏறுவது எமக்கு வெட்கம். எனவே, கூட்டணி அமைக்கும் போது எவருடன் கூட்டணியை அமைத்தால், அரசியல் செய்ய முடியும். எவருடன் செய்யமுடியாது என்பதை ஆராய வேண்டும்.

மக்கள் விடுதலை முன்னணியுடன் பல தேர்தல்களில் கூட்டணி அமைத்துள்ளோம். அவர்களுடன் கூட்டணி அமைத்து, 2010ஆம் ஆண்டு, தான் பாராளுமன்றும் சென்றேன் என்றார்.

ஸ்ரீ லங்கா சுதந்திர கட்சி தலைவரின் அரசியல் செயற்பாடுகள் தொடர்பில் தனக்கு பாரிய வெறுப்பே உள்ளது. அந்த தலைவர் முழுமையாக தோல்வியடைந்த தலைவர் என்றார்.

ஊழல் என்று பொதுவாக இல்லை. அவரது அரசியல் செயற்பாடுகள், தலைமைத்துவம் தொடர்பிலும் நாம் திருப்தியடையவில்லை. எனவே, அவருடன் என்றால் எம்மால் கூட்டணி அமைக்க முடியாது என்றார்.

இதேவேளை, விவசாயிகளுக்கு மீண்டும் இரசாயன உரத்தை வழங்க வேண்டும். நாம் அந்த துறையின் விசேட நிபுணர்களுடன் பேசிய போது, அவர்கள் அனைவரும் விவசாய செயற்பாடுகளுக்கு இரசாயன உரம் வழங்கப்பட வேண்டும் என்றே தெரிவித்தனர். அவ்வாறு வழங்கப்படாது விட்டால் கண்டிப்பாக விவசாயத்துறை கடுமையாக பாதிக்கும் என்றார்.

உரம் தொடர்பில் தவறான அரசியல் தீர்மானங்கள் எடுத்தால் அதற்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்ய முடியாது. ஆனால் இவ்வாறான தீர்மானத்தை எடுத்தவர்களே மக்களுக்கு பதிலளிக்க வேண்டும் என்றார்.

## ஜே.வி.பியுடன் சு.கவுக்கு...

இடதுசாரி சக்திகளைச் சேர்ந்த அனைவரையும் ஒரணியில் திரட்ட வேண்டுமென்ற எண்ணம் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சிக்கு இருக்கிறது. தற்போது சுத்தமாக இருக்கின்ற ஜே.வி.பியுடன், சுத்தமாய் இருக்கும் சுதந்திரக் கட்சி, இணைந்து எதிர்காலத்தை கட்டியெழுப்புவதற்கு இடமிருக்கிறது. கூட்டணி அமைத்து சேவையாற்றுவதற்கு தேவையாயின், அதற்கான இயலுமை தங்களுக்கு உள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.

கொழும்பில், நேற்று (23) இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துரைத்த போதே மேற்கண்டவாறுதெரிவித்தார்.

## அடுப்பு வெடித்ததில்...

மேலதிக சிகிச்சைகளுக்காக டிக்கோயா- கிளங்கன் வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

குறித்த வர்த்தக நிலையத்தில் நேற்று (23) உணவு சமைத்துக்கொண்டிருந்தபோது, காஸ் அடுப்பு வெடித்துள்ளது. இரத்தினபுரி- குருவிட்ட பகுதியைச் சேர்ந்த 27 வயதுடைய இளைஞன் படுகாயமடைந்துள்ளார் எனத் தெரிவித்த நல்லதண்ணி பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளதாக தெரிவித்தனர்.



## கடற்றொழிலாளரின் குடும்பத்துக்கு 10 இலட்சம் ரூபாய் நட்டஈடு

சமுர்த்தி திட்டங்களை உச்சபட்சம் பயன்படுத்தி நீர்வேளாண்மையில் ஈடுபடுவதன் மூலம் கடற்றொழில் சார் மக்களுக்கு நிலையான பொருளாதாரத்தினை ஏற்படுத்த வேண்டுமென அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

முல்லைத்தீவு மாவட்ட கடற்றொழிலாளர் சங்கங்களின் பிரதிநிதிகளுடன் நேற்று (23) நடைபெற்ற கலந்துரையாடலின்போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

புதிதாக தெரிவு செய்யப்பட்ட கரைவலை தொழிலில் ஈடுபடுகின்றவர்களின் சங்கப் பிரதிநிதிகளுடன் கலந்துரையாடிய கடற்றொழில் அமைச்சர், அவர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளை கேட்டறிந்ததுடன், அவை தொடர்பாக மேற்கொள்ளக்கூடிய நடவடிக்கைகள் தொடர்பாகவும் அதிகாரிகளுடன் கலந்துரையாடினார்.

அதனைத் தொடர்ந்து, நந்திக்கடலில் மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டிருந்த போது, 2020 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 03 ஆம் திகதி உயிரிழந்த ஜெ. செலஸ்ரன் என்பவரின் மனைவிக்கு (ரூ.5 இலட்சம்) மற்றும் 2 பிள்ளைகளுக்கான (தலா ரூ. 250,000 ) நட்ட ஈட்டு தொகையாக கடற்றொழில் அமைச்சினால் ஒதுக்கப்பட்ட சுமார் 10 இலட்சம் ரூபாய் பெறுமதியான காசோலைகளை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா வழங்கி வைத்தார்.

அதேபோன்று, நாடளாவிய ரீதியில் இரண்டு இலட்சம் சமுர்த்தி பயனாளர்களின் வாழ்வாதாரத்தை வலுவூட்டும் திட்டத்துக்கு அமைய முல்லைத்தீவு மாவட்டத்தில் கொடுவா மீன் வளர்ப்பில் ஈடுபடுவதற்கு தெரிவு செய்யப்பட்ட பயனாளர்களுக்கு தலா 250,000 ரூபாய் வழங்கத் தீர்மானிக்கப்பட்டுள்ள நிலையில், முதற்கட்ட காசோலைகளும் வழங்கப்பட்டுள்ளன.

## சரியான தீர்மானத்தையே வைத்தியர்கள் எதிர்க்கின்றனர்



சரியான தீர்மானங்களை சுகாதார அமைச்சு எடுத்துள்ளதால், வைத்தியர்கள் போராட்டத்தில் ஈடுபடுகின்றனர் என முன்னாள் சுகாதாரத்துறை அமைச்சர் ராஜித சேனாரத்ன எம்.பி தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் மேலும் தெரிவித்த அவர், எந்தெந்த வைத்தியசாலைகளுக்கு வைத்தியர்களை நியமிக்க வேண்டும் என்பதை சுகாதார அமைச்சே தீர்மானிக்க வேண்டும். சில வைத்தியசாலைகளில் வைத்தியர்கள் அதிகமாக இருக்கிறார்கள்.

வைத்தியர்களின் தொழிற்சங்க உதவிகளை பெற்றுக்கொ ள்வதற்காக அதன் தலைவர்களான வைத்தியர்களுக்கு வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்க ப்படுவதாகவும், நாட்டின் சுகாதாரத்தைப் பேண சுகாதாரத்துறைக்கு வசதிகள் ஏற்படுத்திக்கொடுக்க வேண்டுமா? இல்லையெனில் வைத்திய தொழிற்சங்க தலைவர்களுக்கு வசதிகளை ஏற்படுத்திக்கொடுக்க வேண்டுமா என்றும் வினவினார்.

## பட்டங்களை பெற மறுத்தமை மதத்துக்கு எதிரான தாக்குதல்

இலங்கை போன்ற பௌத்த நாட்டில், பௌத்த பிக்கு ஒருவரிடமிருந்து பட்டங்களைப் பெற மறுப்பதென்பது பௌத்த மதத்துக்கு எதிராக மேற்கொள்ளப்படும் தாக்குதலாகும் என அனுநாயக்க ஓமாரே கஸ்ஸப தேரர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் மேலும் தெரிவித்த அவர், கொழும்பு பல்கலைக்கழகத்தின் பட்டமளிப்பு விழாவில் மாணவர்கள் சிலர் செயற்பட்ட விதத்தை நாம் பார்த்தோம். இது நாட்டின் எதிர்கால சந்ததியினருக்கு வழங்கப்பட்ட தவறான முன்னுதாரணமாகும் என்றார்.

இதற்குப் பின்னால் அரசியல் இருக்கிறது. கொழும்பு பல்கலைக்கழக வேந்தரான முருத்தெட்டுவே ஆனந்த தேரர் சமூகத்துக்குப் பாதிப்பை ஏற்படுத்தும் எந்தவொரு விடயங்களையும் எதிர்த்து பேசக்கூடியவர். எந்தவோர் அரசியல் தவறுகளையும் விமர்சிக்கக்கூடியவர்.

ஆனந்த தேரரிடம் பட்டங்களைப் பெறுவதற்கு மாணவர்கள் சிலர் மறுத்தமை மதத்தை நிராகரிக்கும் செயற்பாடு. இது, பௌத்த தேரரான முருத்தெட்டுவே ஆனந்த தேரருக்கு எதிராக மாத்திரம் மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் அல்ல. இது போன்ற செயற்பாடுகள் சமூகமயப்படுத்துவது நல்லதல்ல என்றார்.



## 17 நாடுகளின் தூதுவர்கள் அமைச்சர் பீரிஸுடன் சந்திப்பு

நாடுகளைப் பிரதிநிதித்துவப்படுத்தும் புதிதாக நியமிக்கப்பட்ட தூதுவர்களை வெளிநாட்டு அமைச்சர் பேராசிரியர் ஜி.எல். பீரிஸ் வெளிநாட்டு அமைச்சில் வைத்து நேற்று முன்தினம் சந்தித்தார்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிடம் டிசெம்பர் 21 ஆம் திகதி 17 தூதுவர்களும் தமது சான்றுகளை வழங்கியதைத் தொடர்ந்து, இந்தச் சந்திப்பு இடம்பெற்றது. இவர்களுள் அநேகமானோர் புதுடெல்லியைத் தளமாகக் கொண்ட வதிவிடமல்லாத தூதரகத் தலைவர்களாவர்.

# மக்களுக்கு சிரமம்

### ஏற்றுக்கொண்டார் அமைச்சர் தினேஸ்



எரிபொருள் விலை அதிகரிப்பால் நாட்டு மக்கள் சிரமப்படுகிறார்கள் என்பதை கல்வி அமைச்சர் தினேஸ் குணவர்தன ஏற்றுகொண்டுள்ளார்.

இது தொடர்பில் மேலும் தெரிவித்த அவர், எரிபொருளின் விலை அதிகரிப்பு எல்லா நாடுகளிலும் ஏற்படுகிறது. எரிபொருள் பயன்பாடுகளை கட்டுப்படுத்தும் முறையான வேலைத்திட்டங்கள் அவசியம். டொலர் கையிருப்பின் அடிப்படையிலேயே எரிபொருள் இறக்குமதி செய்யப்படுகிறது. எரிபொருள் விலை அதிகரிப்பால் நாட்டு மக்கள் சிரமப்படுகிறார்கள் என்பது உண்மை. அதனை ஏற்றுகொள்கிறேன். பொருளாதாரத்தை கட்டிக்காப்பதற்காக, சில விடயங்களை செய்ய வேண்டியுள்ளது. அதற்காகத்தான் எரிபொருள்களின் விலைகள் அதிகரிக்கப்பட்டன. நீண்டகால திட்டமொன்றுக்கு செல்வதற்கு நாம் எதிர்பார்த்துள்ளோம் என்று மேலும் தெரிவித்தார்.

## ஜே.வி.பியின் மாத்தளை ஆர்ப்பாட்டம்








எரிபொருள், அத்தியாவசியப் பொருட்களின் விலைகள் அதிகரிப்பை எதிர்த்தும், அதிகரிக்கப்பட்ட விலையைக் குறைக்குமாறு கோரியும் மக்கள் விடுதலை முன்னணி (ஜே.வி.பி) 20 பிரதான நகரங்களில் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களை நேற்று (23) முன்னெடுத்திருந்தது. மாத்தளை நகரில் முன்னெடுக்கப்பட்ட ஆர்ப்பாட்டத்தின் போது பிடிக்கப்பட்ட படங்கள் இவை. ( படங்கள்: மஹேஸ் கீர்த்திரத்தன)

## பஸ் ரயிலுடன் மோதியது

அழுத்கம துஸித குமார டி சில்வா

பேருவளை மங்களாராம விஹாரைக்கு அருகில் உள்ள ரயில் கடவையில் தனியாருக்கு சொந்தமான பஸ், காலி நோக்கி சென்று கொண்டிருந்த ரயிலில் மோதி விபத்துக்குள்ளாகியது.

திருமண நிகழ்வொன்றுக்கு சென்றுகொண்டிருந்தவர்களை நேற்று முன்தினம் (22) ஏற்றிச் சென்ற பஸ்ஸே, இவ்வாறு ரயிலில் மோதியுள்ளது.

ரயில் கடவைகளுக்கு அருகில் பயணிக்கும் போது, வாகனங்களின் சாரதிகள் மிகுந்த அவதானத்துடன் பயணிக்க வேண்டுமென போக்குவரத்துப் பொலிஸார் அறிவுறுத்தியுள்ளனர்.

## பிரியந்த குமாரவுக்கு இரங்கல்

பாகிஸ்தானில் வைத்து தாக்கி, எரியூட்டி படுகொலை செய்யப்பட்ட இலங்கை பொறியியலாளரான பிரியந்த குமாரவின் மறைவுக்கு அந்நாட்டு வெளிவிவகார அமைச்சர் ஷா மஹ்மூத் குரேஷி இரங்கல் தெரிவித்துள்ளார்.

மேலும், பாகிஸ்தானின் முழு அரசியல் தலைமைகள், மத அறிஞர்கள் உட்பட பாகிஸ்தான் தேசமும் இந்தச் சம்பவத்தை கண்டிப்பதாகவும் குற்றவாளிகளை சட்டத்தின் முன் நிறுத்துவதற்கு தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் எடுக்க பாகிஸ்தான் அரசு உறுதியாக உள்ளதாகவும் தெரிவித்தார்.

பொருளாதார ஒருங்கிணைப்பை உருவாக்குவதற்கும் தெற்காசிய மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கும் சார்க் அமைப்பால் ஒரு சாதகமான சூழ்நிலையை வழங்க முடியும் என பாகிஸ்தான் நம்பிக்கை கொள்வதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

### சாறத்தை அரசாங்கம் அணிந்துகொள்ளாது

## காற்சட்டையை கழற்றிவிட்டது



உரப் பிரச்சினையில் அரசாங்கத்தை மன்னிக்கவே முடியாதென ஆளுங்கட்சியின் பாராளுமன்ற உறுப்பின்ர டிலான் பெரேரா தெரிவித்துள்ளார்.

சாறத்தை அணிந்துகொள்ளாமல் காற்சட்டையை கழற்றுவதுபோலவே உரப் பிரச்சினையில் அரசாங்கம் செயற்பட்டது. இதனை நான் இதற்கு முன்னரும் கூறியிருந்தேன். உரப் பிரச்சினையில் அரசாங்கத்தை மன்னிக்கவே முடியாது.

எனினும், எரிபொருள் விலை அதிகரிப்பு எனும் போது உலக சந்தையில் எரிபொருளின் விலை அதிகரிக்கப்படும் போது உள்நாட்டிலும் எரிபொருளின் விலை அதிகரிக்கும் எனவும் தெரிவித்தார்.

## வீதி விபத்துகளை தடுக்க உலக வங்கி உதவி



இலங்கையில் வீதி விபத்துகளால் நாளொன்றுக்கு சுமார் 8 பேர் உயிரிழக்கின்றனர் எனத் தெரிவித்த நெடுஞ்சாலைகள் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்ணான்டோ, வீதி விபத்துகளை மட்டுப்படுத்த உலக வங்கி அரசாங்கத்துக்கு உதவ முன்வந்துள்ளது என்றார்.

நெலும்தெனிய - தெதிகம புதிய பாலம் அமைப்பதற்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு நேற்று (23) நடைபெற்றது. அதில் கலந்துகொண்டு தொடர்ந்து உரையாற்றிய அமைச்சர்,

எதிர்வரும் இரண்டு வருடங்களில் விபத்துகளை குறைப்பதற்கான விசேட வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்தியுள்ளோம். ஜனவரி இரண்டாவது வாரத்தில் அந்த திட்டத்தை தொடங்குவோம். நித்திரை கலக்கத்தின் காரணமாக பலரும் விபத்துக்கு உள்ளாவதை நாம் கண்டிருக்கிறோம். எனவே, நெடுஞ்சாலைகளில் ஒய்வெடுக்கும் பகுதிகளை முதற்கட்டமாக அமைத்து வருகிறோம்.

ஒய்வெடுக்கும் பகுதிகளில் வாகனங்களை நிறுத்தி, சிறிது நேரம் தூங்கிவிட்டுச் செல்ல முடியும். காப்புறுதி நிறுவனங்களை இணைத்து பாரிய திட்டமொன்றை முன்னெடுக்க இருக்கிறோம். அடுத்த இரண்டு வருடங்களில் விபத்துகளை குறைக்க நடவடிக்கை எடுக்க முடியுமென நம்புகிறோம். அதிவேக நெடுஞ்சாலைகளில் விபத்துகளை குறைப்பதற்கு பொலிஸாருடன் இணைந்து திட்டமொன்றை ஆரம்பிக்க எதிர்பார்க்கிறோம் என்றார்.

## கூரிய ஆயுதத்தால் தாக்கி ஒருவர் கொலை

அகுரஸ்ஸ பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தலஹகம பிரதேசத்தில் நபர் ஒருவர் கூரிய ஆயுதத்தால் தாக்கப்பட்டு வெட்டிக் படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் தொடர்பில் விசாரணைகளை ஆரம்பித்துள்ள பொலிஸார் உயிரிழந்துள்ள நபருக்கு 39 வயது எனவும், அவர் கொட்டேகொட பிரதேசத்தைச் சேர்ந்தவர் எனவும் தெரிவித்துள்ளனர்.

கொலை செய்யப்பட்ட நபர், தனது வீட்டை சுத்தம் செய்துகொண்டிருந்துள்ளார். இந்நிலையில், பக்கத்து வீட்டில் உள்ளவருடன் வாய் தகராறு ஏற்பட்டுள்ளது. அதுவே, மோதலாக மாறியுள்ளது. இந்நிலையிலேயே குறித்த நபர் அடித்து கொலை செய்யப்பட்டுள்ளார் என்பது விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது எனத் தெரிவித்த அக்குரஸ்ஸ பொலிஸார், சந்தேகத்தின் பேரில் இருவரை கைது செய்து, மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் தெரிவித்தனர்.



அதிகாரிகளின் அசமந்தப் போக்கும் அடிமட்ட மக்களின்

# வறுமைக்கு காரணம்

■ ஏ.எச்.ஏ. ஹூஸைன்

அடிமட்ட மக்கள் வறுமையில் சுழல்வதற்கு அதிகாரிகளினதும் அலுவலர்களினதும் அசமந்தப் போக்கும் காரணமாக அமைந்திருப்பதாக பிரதேச அபிவிருத்தி இணைப்புக் குழுவின் தலைவரும் மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான நசீர் அஹமட் தெரிவித்தார்.

தெரிவு செய்யப்பட்ட 247 பயனாளிகளுக்கு வாழ்வாதார உபகரணங்கள் வழங்கி வைக்கும் நிகழ்வு, ஏறாவூர் நகர பிரதேச செயலகத்தில், பிரதேச செயலாளர் நிஹாறா மௌஜூத் தலைமையில், நேற்று (23) நடைபெற்றது.

நிகழ்வில் விதாதா வள நிலையத்தால் கிராம சேவகர் பிரிவில் ஒரு முயற்சியாளரை உருவாக்கும் தேசிய வேலைத் திட்டத்தின் கீழ் தெரிவுசெய்யப்பட்ட 19 பயனாளிகளுக்கு சுமார் 16 இலட்ச ரூபாய் பெறுமதியான வாழ்வாதார உபகரணத் தொகுதிகள் வழங்கப்பட்டன.

மேலும், சமுர்த்தி வாழ்வாதார அபிவிருத்தி வேலைத் திட்டத்தின் கீழ் தெரிவுசெய்யப்பட்ட 228 பயனாளிகளுக்கு சுமார் ஒரு கோடி ரூபாய் பெறுமதியான வாழ்வாதார உபகரணத் தொகுதிகளும் வழங்கப்பட்டன.




நிகழ்வில் உரையாற்றிய நசீர் எம்.பி, "வறிய மக்களை அபிவிருத்திக்கு இட்டுச் செல்வதில் பின்னடைவு ஏற்படுவதற்கான முக்கியமான காரணம் பொறுப்பு வாய்ந்த அதிகாரிகளினதும் அலுவலர்களினதும் வழிகாட்டல்கள் மக்களுக்குக் கிடைக்காமை.

"அதிகாரிகள் விடயத்தில் அடிக்கடி குறை காணுகின்ற இந்த விடயம் உண்மையானது. தமது கடமையை கடமையுணர்வோடும் கண்ணியத்தோடும் செய்யத் தவறும் பட்சத்தில், வறிய மக்களுக்கான விமோசனத் திட்டங்களில் ஒருபோதும் முன்னேற்றம் ஏற்படாது.

"அதிகாரிகளின் கவனக் குறைவான செயல்பாடுகள் வறிய மக்களின் வாழ்க்கையை மேலும் பாதிக்கும். எனவே, இந்த விடயங்களில் பயனாளிகளும் கண்காணிப்பாளர்களான அலுவலர்களும் கவனமெடுத்தால் வறுமையிலிருந்து வாழ்வாதார முன்னேற்றத்தை நோக்கி மக்களைப் பயணிக்க வைப்பது இலகுவாகிவிடும்" என்றார்.

வைத்தியர்களின் தொழிற்சங்க போராட்டம் மக்களையே பாதிக்கின்றது:

# மௌலவி போராட்டம்

■ க. அகரன்

வைத்தியர்களின் தொழிச்சங்க போராட்டத்தால் மக்கள் பாதிக்கப்படுவதாகத் தெரிவித்து, மௌலவி ஒருவர் கவனயீர்ப்பு போராட்டத்தில், நேற்று (23) ஈடுபட்டார்.

குறித்த மௌலவி, தனது மகளுக்கு சிகிச்சை பெற்றுக்கொள்வதற்காக வவுனியா வைத்தியசாலைக்குச் சென்றுள்ளார்.

இதன்போது பணிப்பகிஸ்கரிப்பு முடிவடைந்த பின்னரே, அந்தச் சிகிச்சையை வழங்க முடியும் என்று வைத்தியசாலையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனால் விரக்தியடைந்த அவர், வைத்தியசாலை வளாகத்தில், தனிநபராக கவனயீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டார்.

இதன்போது ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த அவர், வைத்தியர்களின் தொடர் பணிப்பகிஷ்கரிப்பால், பொதுமக்கள் பல்வேறு அசௌகரியங்களை சந்தித்து வருகின்றனர். குறிப்பாக மாதாந்த சிகிச்சைகளை பெற்றுக்கொள்ளும் பல்வேறு நோயாளர்கள் தூரப்பிரதேசத்தில் இருந்துவருகைதந்து ஏமாற்றத்துடன் திரும்பிச் செல்கின்றனர் எனவும், அவர் சாடினார்.



தொடர்ச்சியாக மூன்றாவது நாளாகவும் இந்தப் பணிப்புறக்கணிப்பு தொடர்கின்றது. இந்தப் பிரதேசத்தில் வாழ்கின்ற மக்கள் கூலித்தொழில் செய்தே வாழ்க்கையை நடத்துகின்றனர். ஒரு நாள் தொழிலுக்குச் செல்லாவிடில் அவர்களது குடும்பம் தெருவுக்கு வந்துவிடும்.

வைத்தியர்கள் தங்களது உரிமையின் அடிப்படையில் இதனைச் செய்கின்றார்கள். ஆனால் பாதிக்கப்படும் பொதுமக்களுக்கு யார் பதில் சொல்வது எனவும் வினவினார்.

"மூன்று நாள்களாக வேலைநிறுத்தம் செய்கிறோம். நோயாளர்களே வைத்தியசாலைகளுக்கு வரவேண்டாம்" என்று அறிக்கையாவது போடுகின்றீர்களா? அப்படிச் சொல்லுங்கள்; நோயாளிகள் வீடுகளிலேயே சாகட்டும் எனவும், மௌலவி தெரிவித்தார்.

இந்த நாட்டில் ஏற்படுகின்ற பிரச்சினைகளுக்கு ஜனாதிபதியே பதில் சொல்ல வேண்டும். மூன்று நாள்களுக்குள் ஒரு தீர்வை எட்டமுடியாதா? இந்தச் சந்தர்ப்பத்தில் யாராவது மரணத்தை சந்தித்தால், நீங்கள் மனிதர்களிடத்தில் தப்பலாம். இறைவனிடத்தில் தப்ப முடியாது.

எனவே, மனிதர்களின் உயிரோடு தொடர்புடைய சுகாதாரத்துறையினரின் பிரச்சினைகளைத் தீர்த்து, ஏழைமக்களின் பிரச்சினையில் கவனம் எடுக்குமாறு இந்த அரசாங்கத்தை கேட்டுக்கொள்கின்றேன் என்றார்.



மட்டக்களப்பில்

## டெங்கின் தாக்கம் அதிகரிப்பு

■ வா.கிருஸ்ணா

மட்டக்களப்பு மாவட்டத்தில் டெங்கின் தாக்கம் அதிகரித்துவரும் நிலையில், டெங்கு தாக்கம் உள்ள பகுதிகளில் புகை விசுறும் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

மட்டக்களப்பு சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுக்குட்பட்ட மாமாங்கம் பகுதியில் டெங்கு தொற்றாளர் அடையாளம் காணப்பட்ட நிலையில், அப்பகுதிகளில் புகை விசுறும் பணிகள் முன்னெடுக்கப்பட்டன.

மட்டக்களப்பு சுகாதார வைத்திய அதிகாரி டொக்டர் கே.கிரிசுதனின் அறிவுறுத்தலுக்கு அமைவாக, மாமாங்கம் பொதுச் சுகாதார பரிசோதகர் கிஷான்தராஜ் தலைமையில், இந்த நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன.

தற்போது மழையுடன் கூடிய வானிலை நிலவிவருவதால் சுற்றாடலை தூய்மையாக வைத்துக்கொள்ளுமாறு, சுகாதாரத் துறையினர் அறிவுறுத்திவரும் நிலையிலும் மட்டக்களப்பு மாவட்டத்தில் டெங்குத் தொற்றாளர்களின் எண்ணிக்கை அதிகரித்துவருவதாக சுகாதாரப் பிரிவினர் தெரிவித்தனர்.

மட்டக்களப்பு சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் இம்மாதம் 06 டெங்கு தொற்றாளர்கள் இனங்காணப்பட்டுள்ளதாக மட்டக்களப்பு சுகாதார வைத்திய அதிகாரி தெரிவித்தார்.



## பாராட்டு

கல்முனை கார்மேல் பற்றிமா தேசிய கல்லூரியிலிருந்து கடந்த இரு வருடங்களில் பல்கலைக்கழகத்துக்குத் தெரிவான 114 மாணவர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு, கல்லூரி அதிபர் வண.சனோ.சந்தியாகு தலைமையில் நேற்று (23) நடைபெற்றது.
நிகழ்வின் பிரதம அதிதியாக கிழக்கு மாகாண கல்விப் பணிப்பாளர் திருமதி நகுலேஸ்வரி புள்ளநாயகம் கலந்துகொண்டார்.
(படங்கள்: வி.ரி. சகாதேவராஜா)

## பாரை மீன்களால் கொள்ளை இலாபம்

■ பாறுக் ஷிஹான்

திடீர் வானிலை மாற்றம் காரணமாக, அம்பாறை மாவட்டத்தின் கல்முனை பிராந்திய கடற்கரைகளில் பாரிய மீன்கள் பிடிபடுகின்றன.

கடந்த சில தினங்களுக்கு முன்னர் 3 வகையான பாரிய பாரை மீன்கள், வளையா மீன்கள், சுறா மீன்கள் எனக் கரை வலைகள் மூலம் பிடிக்கப்பட்டு, பல இலட்சம் வரை விற்பனை செய்யப்பட்டன.

நேற்றும் (23) இவ்வாறு சாய்ந்தமருது, கல்முனை பகுதிகளில் பாரை இன மீன்கள் அதிகளவாக கரை



வலைகளுக்கு பிடிக்கப்பட்டு, விற்பனை செய்யப்பட்டு வருகின்றன.

குறித்த பாரை மீன் ஒன்றின் பெறுமதி சுமார் 1,000 ரூபாய் முதல் 1,200 வரை விற்பனையாவதுடன், இவ்வாறு பிடிக்கப்படும் மீன்களால் ஒரு மீனவரின் நாள் வருமானமாக 4 முதல் 5 இலட்சமாகவும் உள்ளமை குறிப்பிடத்தக்கது.



## தமிழ் இலக்கிய விழா...

முல்லைத்தீவு, மாந்தை கிழக்கு பிரதேச செயலகத்தின் தமிழ் இலக்கிய விழாவும் பிரதேச மலர் வெளியீட்டு விழாவும், மாந்தை கிழக்கு பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில், பிரதேச செயலாளர் செல்வி றஞ்சனா நவரட்னம் தலைமையில், நேற்று முன்தினம் (22) காலை 10 மணிக்கு நடைபெற்றுள்ளன.
(படப்பிடிப்பு: சுப்பிரமணியம் பாஸ்கரன்)




ஜெயந்தி நகரில்

## எரிவாயு அடுப்பு வெடித்தது

■ சுப்பிரமணியம் பாஸ்கரன்

கிளிநொச்சி, ஜெயந்தி நகர் பகுதியில், நேற்று (23) எரிவாயு அடுப்பு வெடித்து சிதறியுள்ளது.

பெண் ஒருவர், காலை உணவு தயாரித்துக் கொண்டிருந்த போது, இவ்வனர்த்தம் இடம்பெற்றுள்ளது.

குறித்த வெடிப்பு சம்பவத்தில் எவ்வித பாதிப்புகளும் ஏற்படவில்லை.

இந்தச் சம்பவம் தொடர்பில் கிளிநொச்சி பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

## மாதாந்த இயலரங்கு

■ எஸ். தில்லைநாதன்

அகில இலங்கை கம்பன் கழகமும் அவுஸ்திருரேலியக் கம்பன் கழகமும் இணைந்து நடத்தும் 'முந்துதமிழ்' மாதாந்த இயலரங்கின் டிசெம்பர் மாத நிகழ்வு, நாளை (25) மாலை 3.30 மணிக்கு (இலங்கை நேரம்), நிகழ்நிலை நிகழ்வாக நடைபெறவுள்ளது.

இயலரங்கம் நிகழ்வு வெள்ளவத்தை ஸ்ரீ ஐஸ்வர்யலஷ்மி கோவில் பிரதம சிவாச்சாரியார் தர்ஷன் குருக்களின் மங்கல ஆரத்தி மற்றும் அவுஸ்திரேலியாவைச் சேர்ந்த திரு. திருமதி இராமரத்தினம் மகதி தம்பதிகளின் கடவுள் வாழ்த்தோடும், இந்நிகழ்வு ஆரம்பமாகவுள்ளது.

சிறப்பு நிகழ்வாக, தமிழ்நாட்டைச் சேர்ந்த வழக்கறிஞர் ஸ்டாலின் குணசேகரனின் தலைமையில் 'இலக்கியம் இன்று பெரிதும் பயன்படுவது அறிவூட்டவே' என்ற தலைப்பில் வழக்கறிஞர் கு.இராஜகுலேந்திராவும், 'அறமூட்டவே' என்ற தலைப்பில் தமிழ் தென்றல் அலி அக்பரும், 'இன்பமூட்டவே' என்ற தலைப்பில் முனைவர் உமா தேவராஜனும் விவாத அரங்கில் விவாதிக்கவுள்ளனர்.

இந்த இயலரங்கம் நிகழ்வை, AKILA ILANGAI KAMBAN KAZHAGAM, KAMBAN KAZHAGAM AUSTRALIA ஆகிய யூடியுப் முகவரிகளிலும் KAMBAVARITHY ILANKAI JEYARAJ , KAMBAN KAZHAGAM AUSTRALIA ஆகிய பேஸ்புக் முகவரிகள் ஊடாகவும் கண்டு களிக்கமுடியும்.



மாற்றுத்திறனாளிகளுக்கான

## தொழிற்சந்தை ஆரம்பம்

■ சுப்பிரமணியம் பாஸ்கரன்

மாற்றுத்திறனாளிகளுக்கான தொழில் வாய்ப்புகளை பெற்றுக் கொடுக்கும் வகையில் ஏற்பாடு செய்யப்பட்ட தொழிற்சந்தை நிகழ்வு, மாவட்டச் செயலக திறன் விருத்தி மண்டபத்தில், கிளிநொச்சி மாவட்ட மேலதிக அரச அதிபர் க. சிறிமோகனன் தலைமையில், நேற்று (23) காலை 10 மணிக்கு ஆரம்பித்து வைக்கப்பட்டது.

மனித வலு மற்றும் வேலைவாய்ப்புத் திணைக்களத்தால் மாற்றுத்திறனாளிகளுக்கான தொழில்வாய்ப்பைப் பெற்றுக்கொடுக்கும் நோக்கில், கிளிநொச்சி மாவட்ட செயலகத்தால், இந்நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டது.

இந்நிகழ்வில், கிளிநொச்சி மாவட்டச் செயலாளர் ரூபவதி கேதீஸ்வரன், கிளிநொச்சி மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் மாவட்ட இணைப்பாளருமான வை.தவநாதன் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்

குறித்த நிகழ்வில், நூற்றுக்கும் மேற்பட்ட மாற்றுத்திறனாளிகளுக்கு தொழில் வழங்கும் நிலையில் காணப்படுகின்ற தனியார் நிறுவனங்களின் தொழில் நேர்முகத்தேர்வு ஆலோசனைகளும் வழங்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

தங்கப் பதக்கம் வென்ற

## பயிற்றுவிப்பாளர் ஜெயக்குமாருக்கு பாராட்டு

■ ஜவ்பர்கான், ஏ.எச்.ஏ.ஹூஸைன்

அகில இலங்கை ரீதியில் இடம்பெற்ற சிரேஷ்ட மெய்வல்லுனர்களுக்கு இடையிலான 07ஆவது விளையாட்டுப் போட்டியில், மட்டக்களப்பு மாவட்டச் செயலக விளையாட்டுப் பயிற்றுவிப்பாளர் பஞ்சாச்சரம் ஜெயக்குமார், தேசிய ரீதியில் தங்கம் மற்றும் வெள்ளிப் பதங்கங்களை வென்றுள்ளார்.

மட்டக்கப்பு மாவட்டத்துக்கு பெருமை சேர்த்துள்ள இவரை,




மாவட்டச் செயலாளர் கணபதிப்பிள்ளை கருணாகரன் பாராட்டுத் தெரிவித்தார்.



# ‘எல்ல’யை இழந்தது யானை

■ எம். செல்வராஜா

பதுளை மாவட்டத்தின் எல்ல பிரதேச சபையின் அதிகாரமானது, ஐக்கிய தேசிய கட்சியின் கட்டுப்பாட்டிலிருந்து ஸ்ரீ லங்கா சுதந்திர பொதுஜன முன்னணி வசமானது.

தவிசாளர் உதய ஜீவ பண்டாரவின் தலைமையில், ஐக்கிய தேசிய கட்சியின் கட்டுப்பாட்டில் எல்ல பிரதேச சபையின் அதிகாரம் இருந்தது. அடுத்த ஆண்டுக்கான வரவு- செலவுத்திட்ட அறிக்கை, இரண்டு முறை சமர்ப்பிக்கப்பட்டும், இரண்டு தடவைகளும் தோற்கடிக்கப்பட்டது.

இதையடுத்து, புதிய தவிசாளரைத் தெரிவு செய்வதற்காக, பதுளை மாவட்ட உள்ளூராட்சி மன்ற ஆணையாளர் மங்கள விஜயநாயக்க தலைமையில், எல்ல பிரதேச சபை நேற்று (23) புதிய தவிசாளரை தெரிவு செய்வதற்காக, கூடியது.

ஐக்கிய தேசிய கட்சி சார்பாக எல்ல பிரதேச சபை தவிசாளராக இருந்த உதய ஜீவ பண்டாரவும், ஸ்ரீ லங்கா சுதந்திர பொதுஜன முன்னணி சார்பாக எம்.டி.மாலக்க பிரபாத் சிரிசேன (ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி) போட்டியிட்டனர்.

திறந்த வாக்கெடுப்பில், எம்.டி. மாலக்க பிரபாத் சிரிசேன வெற்றி பெற்று, எல்ல பிரதேச சபையின் புதிய தவிசாளராகத் தெரிவு செய்யப்பட்டார்.

21 உறுப்பினர்களைக் கொண்ட எல்ல பிரதேச சபையில் ஸ்ரீ லங்கா பொதுஜன முன்னணியின் ஏழு பேரும், ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் ஐந்து பேரும், சுயேச்சைக்குழு ஒன்றுமாக 13 பேர் எம்.டி. மாலக்க பிரபாத் சிரிசேனவிற்கு ஆதரவாக வாக்களித்தனர்.

ஐக்கிய தேசிய கட்சியின் உறுப்பினர்கள் ஏழு பேர் மாத்திரம் முன்னாள் தவிசாளர் உதயஜீவ பண்டாரவிற்கு ஆதரவாக வாக்களித்தனர்.

இதனடிப்படையில் ஆறு அதிகப்படியான வாக்குகள் வித்தியாசத்தில் எம்.டி. மாலக்க பிரபாத் சிரிசேன வெற்றிபெற்றார். அவர், மாவட்ட ஆணையாளர் முன்னிலையில், எல்ல பிரதேச சபைத் தவிசாளராக சத்திய பிரமாணம் செய்து பதவியையும் ஏற்றுக்கொண்டார்.

இதற்கமைய, எல்ல பிரதேச சபையானது, ஸ்ரீ லங்கா பொதுஜன முன்னணி, ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி ஆகிய இரு கட்சிகளும் இணைந்த வகையிலான இணைத் தலைமைகளின் கட்டுப்பாட்டில் இயங்குவதற்கும் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

‘இரத்தின தீப’ அமைப்பின்

## கௌரவிப்பு நிகழ்வு

■ மொஹொமட் ஆஸிக்

மலையக கலை கலாசார சங்கத்தின் இரத்தின தீப அமைப்பானது, இலங்கையின் பிரபல பாடகி என்ஜலின் குணதிலக்க மற்றும் தென் இந்திய சினிமா கலைஞரும், பிரபல பாடகருமான எஸ்.பி. பாலசுப்ரமணியம் ஆகியோரது நினைவு தின வைபவத்தை இந்த மாதம் 26ஆம் திகதி நடத்த உள்ளது.

கண்டி, கெப்பெடிபொல மண்டபத்தில் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை பி.ப 2.00 மணிக்கு இந்நிகழ்வு நடைபெறவுள்ளது.

குறித்த நிகழ்வில் பல்வேறு கலைஞர்களும் ஊடகவியலாளர்களும் கௌரவிக்கப்பட உள்ளனர்.

இந்நிகழ்வின் அதிதிகளாக கண்டி மேயர் கேசர சேனாநாயக்கா, சிங்கள தமிழ் தினசரிகளின் ஆசிரிய பீட உறுப்பினர்கள் பலர் கலந்துகொள்ள உள்ளதாக அதன் ஏற்பாட்டாளர் ராஜா ஜெண்கின்ஸ் தெரிவித்தார்.

புதிய உற்பத்தி விதிமுறைகள் அறிமுகம்:

## நிர்வாகத்தை எச்சரித்தார் செந்தில் தொண்டமான்



வழக்கமான நடைமுறையை விட, அதிக சுமை தொழிலாளர்கள் மீது திணிக்கப்பட்டடுள்ளதாகவும் புதிய உற்பத்தி திறனுக்கான அளவு என்பது ஒரு சாதாரண தொழிலாளியின் வேலைத்திறனிலும் அதிகமாக உள்ளதாகவும் ஹப்புத்தளை தோட்டத் தொழிலாளர்களால் பெருந்தோட்ட பிராந்தியங்களுக்கான பிரதமரின் இணைப்பு செயலாளர் செந்தில் தொண்டமானின் கவனத்துக்கு கொண்டு வரப்பட்டுள்ளது.

இந்தத் தகவல் செந்தில் தொண்டமானுக்கு வழங்கப்பட்டத்தை அடுத்து தொழிலாளர்களைத் சந்திப்பதற்கு தேயிலை தோட்டத்திற்கு நேரடியான விஜயம் மேற்கொண்டு, ஆய்வு செய்ததுடன், தொழிலாளர்களுடன் இது சம்பந்தமான கலந்துரையாடல் மேற்கொள்ளப்பட்டது.

தொழிலாளர்கள் மீதான இவ்வாறான அணுகுமுறை தொடருமானால் நிர்வாகத்திற்கு எதிராக மிகக் கடுமையான தொழிற்சங்க நடவடிக்கை முன்னெடுக்கப்படும் என நிர்வாகத்தின் கவனத்திற்கு கொண்டு செல்லப்பட்டுள்ளது.







## இரத்ததானம்...

தேசிய சேமிப்பு வங்கியின் தலவாக்கலை கிளையால் ஏற்பாடு செய்த இரத்ததான நிகழ்வு, தலவாக்கலை ஸ்ரீ சத்தர்மாராமய விஹாரையில் கொவிட்-19 சுகாதார விதிகளுக்கமைய நேற்று முன்தினம் (22) நடைபெற்றது. இந்த இரத்ததான நிகழ்வில், தலவாக்கலை பகுதியைச் சேர்ந்த நூற்றுக்கும் அதிகமானோர் கலந்து கொண்டு இரத்ததானம் செய்தனர். (பி.கேதீஸ்)

மனைவியைக் கொன்றவர்

## 14 வருடங்களின் பின்னர் சிக்கினார்



■ ரஞ்சித் ராஜபக்ஷ

2007ஆம் ஆண்டு மனைவியை கட்டையால் தாக்கி கொடூரமாக படுகொலை செய்த சம்பவத்தின் குற்றவாளியான கணவர், தலைமறைவாகியிருந்த நிலையில், 14 ஆண்டுகளுக்குப் பின்னர் குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் நேற்றுமுன்தினம் (22) கைது செய்யப்பட்டுள்ளார்.

49 வயதான இரண்டு பிள்ளைகளின் தாயான ஜஸ்மின் ரஞ்சனி என்பவரே இவ்வாறு படுகொலை செய்யப்பட்டிருந்தார்.

சந்தேகநபர் தலவாக்கலை தபால் நிலையத்தில் பணிபுரிந்து வந்ததுடன், வட்டகொட தோட்டத்தில் வசித்து வந்துள்ளார்.

மனைவியை கொலை செய்ததன் பின்னர் தப்பியோடிய அவர், எம்பிலிப்பிட்டிய, துங்கம பிரதேசத்தில் தலைமறைவாக வாழ்ந்து வந்துள்ளார்.

இது தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்ட குற்றப் புலனாய்வு அதிகாரிகள் குழு, 74 வயதான நபரை எம்பிலிப்பிட்டிய பிரதேசத்தில் வைத்து கைது செய்தனர். அவரை நுவரெலியா நீதவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளனர்.

36ஆவது சமுர்த்தி வங்கிக் கிளை

## அக்கரபத்தனையில் திறந்து வைக்கப்பட்டது



■ பா.பாலேந்திரன்

சமுர்த்தி வங்கியின் 36ஆவது வங்கிக் கிளையானது, அக்கரப்பத்தனை நகரில் திறந்து வைக்கப்பட்டது.

நுவரெலியா மாவட்ட பிரதேச செயலாளர் தலைமையில், லிந்துலை சமுர்த்தி வங்கி முகாமையாளர் திருமதி தாரணி மகேந்திரன் பங்களிப்புடன் நேற்று முன்தினம் (22) அக்கரப்பதனை நகரில் திறந்து வைக்கப்பட்டது.

அதிகளவான சமுர்த்தி பயனாளிகள் காணப்படுகின்ற இப்பகுதியில், சிறந்த சமுர்த்தி பணிகளை முன்னெடுக்க முடியும் என்றும் இச் சமூர்த்தி வங்கியின் உடாக அக்கரப்பதனை பிரதேச சபைக்கு உட்பட்ட 10 கிராமசேவகர் பிரிவுகளை சேர்ந்த பயனாளிகளும் பயன்பெற முடியும் என தெரிவித்துள்ளார்.

மூன்று தலைமுறையாக வாழ்ந்து வரும் இடத்தை

## “தனிநபருக்கு வழங்காதே”

■ துவாரகஷான்



நாவலப்பிட்டி, போகில் தோட்டத்தின் 100 ஏக்கர் காணியை தனிநபர் ஒருவருக்கு வழங்குவதற்கு எதிர்ப்புத் தெரிவித்து, அந்தத் தோட்ட மக்களால் நேற்று (23) எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

நூறு ஏக்கர் நிலமானது, தனக்கு சொந்தமானது என் கோரி, 12 வருடகாலமாக நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டு விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வந்தது.

இந்நிலையில், வழக்குத் தாக்கல் செய்யப்பட்ட நபருக்கே இந்த 100 ஏக்கர் சொந்தமென நீதிமன்றத்தால் தீர்ப்பளிக்கப்பட்டது. அதனையடுத்து, நீதிமன்றத்தில் இருந்து அதிகாரிகள் நேற்றைய தினம் (23) தோட்டத்திற்கு வருகை தந்து, குறித்த நபருக்கு இடத்தினை வழங்குவதற்கு வந்துள்ளனர்.

எனினும், மூன்று தலைமுறை காலமாக இந்தத் தோட்டத்தில் வாழ்ந்து வருவதாகவும் இந்த இடத்தை குறித்த நபருக்கு வழங்க முடியாது. அவ்வாறு வழங்கினால் எதிர்காலத்தில் தமக்கு பெரும் பாதிப்பை ஏற்படுத்தும் என தெரிவித்து நேற்று (23) காலை நாவலப்பிட்டி- தலவாக்கலை பிரதான வீதியை மறித்து, ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்த ஆர்ப்பாட்டம் சுமார் 3 மணி நேரம் இடம்பெற்றதுடன், நீதிமன்றத்திலிருந்து வருகை தந்தவர்களுக்கு ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்ட மக்களுக்கும் இடையில் கலந்துரையாடல் இடம்பெற்றது.

அதிகாரிகள் இந்தக் காணி தொடர்பான அறிக்கை ஒன்றினை நீதிமன்றத்திற்கு வழங்குவதாக தெரிவித்ததையடுத்து மக்கள் ஆர்ப்பாட்டத்திலிருந்து கலைந்து சென்றனர்.

இந்த ஆர்ப்பாட்டத்தால் குறித்த வீதியுடனான போக்குவரத்து சுமார் 3 மணிநேரம் தடைப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## விபத்தில் ஆண் பலி

■ டி.சந்ரு

நுவரெலியாவில் சிட்டி சந்தியில் நேற்று (23) பிற்பகல் இடம்பெற்ற விபத்தில், ஆணொருவர் மரணமடைந்துள்ளார்.

நுவரெலியா - உடபுஸ்ஸலாவ பிரதான வீதி தற்போது புனரமைக்கப்பட்டு வருகிறது. இந்நிலையில், மோட்டார் சைக்கிளில் பயணித்த 50 வயது மதிக்கத்தக்கவரே விபத்தில் சிக்கி மரணமடைந்துள்ளார்

இவர், நுவரெலியா ரூவான்எலிய பகுதியை சேர்ந்தவர் என அடையாளம் காணப்பட்டுள்ளார். மோட்டார் சைக்கிளுடன் அவர், வீதியில் கவிழ்ந்துவிட்டார். தன்னை சுதாகரித்துக்கொண்டு எழும்புவதற்கு முன்னரே, பின்னால் வந்த நுவரெலியா மாநகர சபைக்குச் சொந்தமான பௌஸர், அவர் மீதேறியுள்ளது. சம்பவ இடத்திலேயே அவர் மரணமடைந்துவிட்டார்.

## நிவாரணத்துக்காக பந்துலவை சந்திக்கிறது இ.தொ.கா

■ ரஞ்சித் ராஜபக்ஷ

நாட்டில் அதிகரித்துச் செல்லும் வாழ்வாதார நெருக்கடிக்கு மத்தியில், தோட்டத் தொழிலாளர்களுக்கு நிவாரண விலைக்கு சதொச மூலம் உணவுப் பொருள்களை விநியோகிக்க, விடயதானத்துக்குப் பொறுப்பான அமைச்சர் பந்துல குணவர்தனவுடன் கலந்துரையாட இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் தீர்மானித்து உள்ளதென பாராளுமன்ற உறுப்பினர் மருதபாண்டி ரமேஸ்வரன் தெரிவித்தார்.

கொட்டகலை சீ.எல்.எப் இல் நேற்று (23) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.



தொடர்ந்து தெரிவித்த அவர், அத்தியாவசியப் பொருள்களின் விலை அதிகரிப்பானது தற்காலிகமானது. எதிர்க்கட்சி கூறும் வகையில் நாட்டில் பாரிய பொருளாதார நெருக்கடி ஏற்படவில்லை. எமக்கு அண்டை நாடான இந்தியாவில் கூட எரிபொருளின் விலை அதிகரிப்பு இலங்கையை விட அதிகம் என்றார்.

தொழிலாளர்களுக்கு 1,000 சம்பள அதிகரிப்பு வழங்கப்படாமை தொடர்பில், அக்கரபத்தனை பிளான்டேசனுக்குட்பட்ட தோட்டங்களில் வேலைசெய்யும் சகல தொழிலாளர்கள் மற்றும் ஏனைய தொழிற்சங்கங்களின் ஒத்துழைப்புடன், முன்னெடுக்கப்படும் பணிபகிஷ்கரிப்பு நீடிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்த அவர், இந்தப் பணிபகிஷ்கரிப்பை 27ஆம் திகதியுடன் நிறைவுக்கு கொண்டு வருவதாகவும் தெரிவித்தார்.

சம்பள அதிகரிப்பு தொடர்பில், குறித்த பெருந்தோட்ட நிறுவனத்துடனான கலந்துரையாடல் வெற்றியளித்துள்ளதாகவும் இந்த விடயம் தொடர்பில் ஏனைய பெருந்தோட்ட நிறுவனங்களுடன் கலந்துரையாடவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

# தமிழ்பேசும் கட்சிகளின் ஒன்றிணைவு காலத்தின் கட்டாயமானது

அரசியலமைப்பின் 13ஆவது திருத்தத்துக்கான மூலகாரணம், இலங்கை- இந்திய ஒப்பந்தமாகும். அதனூடாகவே மாகாண சபைகள் எனும் முறைமை தோற்றுவிக்கப்பட்டது. வடக்கு, கிழக்கை இணைத்து, வடகிழக்கு மாகாணம் உருவானது. அதன்பின்னர், உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பால், வடகிழக்கு பிரிக்கப்பட்டு வடக்கு,கிழக்கு மாகாணங்களாகின.

மாகாண சபைத் தேர்தல் கிடப்பில் போடப்பட்டிருக்கும் இந்நிலையில், அத்தேர்தலை நடத்துவதில் சட்டச்சிக்கல்கள் ஏற்பட்டுள்ளன. புதிய முறைமையிலா? அல்லது, பழைய முறையிலா தேர்தலை நடத்துவதென்பதைத் தீர்மானிக்கும் அதிகாரம் சட்டவாக்க சபைக்கே உண்டு.

மாகாண சபைத் தேர்தலை நடத்துவதிலுள்ள முடிச்சை, சட்டவாக்க சபையே அவிழ்க்கவேண்டும். இதன் ஊடாகவே தேர்தலை நடத்தமுடியும். அதன்பின்னர்தான், தமிழ்பேசும் மக்களுக்காகக் கிடைத்திருந்த அற்பசொற்ப அதிகாரங்களையேனும் பயன்படுத்தமுடியும். ஆனால், மாகாண சபை முறைமை ஏற்படுத்தப்பட்டதன் பின்னர், வடக்கு, கிழக்கு மாகாணங்களைத் தவிர, அனைத்து மாகாணங்களும் அந்த வரப்பிரசாதங்களை அனுபவித்தன.

மாகாண சபை முறைமைக்கு எதிராகப் போர்க்கொடி தூக்கிய ஜே.வி.பியும் அத்தேர்தலில் போட்டியிட்டு தமது பிரதிநிதிகளை சபைகளுக்கு அனுப்பியிருந்தது. இந்நிலையில், மாகாண சபை முறைமை ஒழிக்கப்பட வேண்டும்; அது ஒரு 'வெள்ளை யானை' என்றெல்லாம் பிரசாரங்கள் முன்னெடுக்கப்பட்டன.

இந்நிலையில்தான், மாகாண சபைத் தேர்தலை நடத்தவேண்டுமென இந்தியா அடிக்கொரு தடவை, இலங்கை அரசாங்கத்தை வலியுறுத்தி வருகின்றது. ஆனால், செவிடன் காதில் ஊதிய சங்கைப் போன்று, இந்த அரசாங்கம் செயற்படுகிறது.

கிடைத்திருந்த ஆகக்குறைந்த அதிகாரங்களை மீளவும் பெற்றுக்கொள்ளும் நோக்கிலும், பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வைக் காணும் நோக்கிலுமான பயணங்கள் தொடர்ந்துகொண்டுதான் இருகின்றன. அதிலொரு படியாக, தமிழ் பேசும் கட்சிகளின் சந்திப்புகளைக் குறிப்பிட்டுக் கூறமுடியும். இதில் தயாரிக்கப்பட்ட ஆவணம், இந்தியாவிடம் கையளிக்கப்படவுள்ளது.

அதன்பின்னர், இந்தியா இன்னும் பலமாக அழுத்தங்களைப் பிரயோகிக்கக்கூடும். பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவதற்கு திக்குமுக்காடிக் கொண்டிருக்கும் அரசாங்கம், இந்தியாவுடன் பேச்சுவார்த்தை நடத்தியமை ஒன்றும் புதிதல்ல. அதற்கென சில நிபந்தனைகளை இந்தியா விதிக்கக்கூடும்.

தமிழ் பேசும் கட்சிகளின் ஆவணம், தக்க தருணத்தில் தயாரிக்கப்பட்டுள்ளது. அந்த ஆவணத்திலிருக்கும் பரிந்துரைகளைக்கூட, நிபந்தனையாக இந்தியா விதித்தால் ஆச்சரியப்படுவதற்கில்லை. ஆகையால், அபகரிக்கப்பட்டுள்ள ஆகக் குறைந்த அதிகாரங்களை, மீளப் பெற்றுக்கொள்வதற்கு தமிழ் பேசும் கட்சிகள் அனைத்தும் ஓரணியில் திரளவேண்டும்.

இவ்வாறு ஓரணியில் திரளும்போது, தென்னிலங்கையில் வேறுவகையான பிரசாரங்கள் முன்னெடுக்கப்படக்கூடும். ஆதலால்தான், "இது ஒரு சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வாகும். இது ஒருபோதும் சிங்கள மக்களுக்கு எதிரானதல்ல" என, தீர்க்கதரிசனத்துடன் மனோ கணேசன் தெரிவித்திருக்கின்றார்.

'தட்டினால்தான் கதவு திறக்கப்படும்'; அதனை ஓரிரு கட்சிகள் மட்டுமே செய்வதால், அழுத்தம் குறைவாக இருக்கும். பொது விடயமொன்றில், அரசியல் கொள்கைகளுக்கு அப்பால் சென்று, தமிழ் பேசும் கட்சிகள் ஓரணியில் திரள்வதே காலத்தின் தேவையாகும்.


## தமிழ் Mirror க்கு எழுதுங்கள்

www.tamilmirror.lk


தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk


2022க்கான முன்னோட்டம் – 04: இலங்கையைச் சூழ

# உருளும் பகடைக் காய்கள்



தெ. ஞாலசீர்த்தி மீநிலங்கோ

அடுத்தாண்டு, சீனாவின் கொலனியாக இலங்கை மாறுமா? அல்லது, இன்னும் கொஞ்சம் காலமெடுக்குமா? இல்லையெனில், ஏற்கெனவே சீனாவின் கொலனியாக இலங்கை மாறிவிட்டதா? ஆசியாவுக்கான அதிகாரப் போட்டியில், மிகவும் முக்கியமான வினாக்கள் இவை.

இந்தக் குட்டித் தீவின் மீது, எல்லோருக்கும் இவ்வளவு அக்கறை ஏன் என்று சிலர் சிந்திக்கலாம். ஒருபுறம், அமெரிக்காவின் 'ஆசியாவை சமநிலைப்படுத்தல்'; இன்னொருபுறம், சீனாவின் 'ஒரு வார், ஒரு வழி'; இந்தியாவின் 'வங்காள விரிகுடா முன்னெடுப்பு'; ஜப்பானின் 'இந்தோ - பசுபிக் மூலோபாயம்' என இவை எல்லாவற்றுக்கும் நடுவே, இலங்கை இழுபட்டுச் சீரழிகின்றது. புதிதாக இப்போது 'நாற்கர பாதுகாப்பு உரையாடல்' என்று அழைக்கப்படுகின்ற அமெரிக்க - ஜப்பானிய - இந்திய - அவுஸ்திரேலியக் கூட்டும் உருவாகியுள்ளது.

இவை எல்லாவற்றுக்கும் நடுவே, இலங்கைக்கான சீனத் தூதுவரின் வடக்கு விஜயம் கவனம் பெற்றிருக்கிறது. அவரது "இதுவே, முடிவும் தொடக்கமும் ஆகும்" என்ற சொற்கள் முக்கியமானவை. சீனா ஒரு நாட்டின் உள்அலுவல்களில் தலையிடுவதில்லை என்ற அயலுறவுக் கொள்கையின் அடிப்படையில், இலங்கையின் இனமுரண்பாடு குறித்துக் கருத்துகள் எதையும் தெரிவிப்பதை, இன்றுவரை தவிர்த்தே வந்திருக்கிறது.

இந்தியாவும் மேற்குலக நாடுகளும், போருக்குப் பிந்தைய காலப்பகுதியில் வடக்கு, கிழக்குக்கு மனிதாபிமான, மீள்கட்டுமான உதவிகளுக்கு முண்டியடித்த போது, சீனா அவசரம் காட்டவில்லை. ஆனால், இலங்கை அரசாங்கம் வேண்டிநின்ற உதவிகளை, வழங்கியது. இலங்கையில் சீனாவின் புதிய நகர்வுகள், உறுதியான முன்நகர்வு இராஜதந்திரத்தை (Asserive Diplomacy) நோக்கி, சீனா நகர்வதற்கான குறிகாட்டியே ஆகும்.

இலங்கையில் மோசமடைகின்ற பொருளாதார நெருக்கடியும் அதனுடன் இணைந்த அரசாட்சியின் சீர்குலைவும் குறிப்பிடத்தக்கன. இதன் விளைவாக, தனது அலுவல்களைத் தானே தீர்மானிக்கும் நிலையில் இலங்கை இல்லை. இதனால், இலங்கையின் உள்நாட்டுக் கொள்கை மட்டுமன்றி, அயலுறவுக் கொள்கையும் நோக்கற்றதாக உள்ளது.

அனைத்துக்கும் அடிப்படையாக இலங்கையின் பொருளாதார நெருக்கடி அமைகின்றது. 'பிச்சை எடுப்பவர்கள், தெரிவு செய்பவர்களாக இருக்கமுடியாது' என்ற பழமொழிக்கு, சிறந்ததோர் உதாரணமாக இலங்கை இருக்கின்றது.

இலங்கையின் இன்றைய நெகிழ்ச்சியானதும் நோக்கற்றதும் எளிதில் உடையக்கூடியதுமான அரசியல் - பொருளாதார நிலைமை, மிகவும் ஆபத்தானது. இது, இலங்கைக்கு மட்டுமன்றி, தென்னாசியப் பிராந்தியத்தின் பாதுகாப்புக்கும் சமநிலைக்கும், மிகுந்த சவாலை உருவாக்கக்கூடியது.

சரியாகச் சொல்வதானால், மலைமுகட்டின் விளிம்பில் இலங்கை இருக்கிறது. மெதுவாகத் தள்ளிவிடுவதற்குக் கூட, எவரும் தயாரில்லை. அதேவேளை, கைகொடுத்துத் தூக்கவும் யாரும் தயாரில்லை. பூகோள அரசியலின் இயங்குநெறி, இவ்வாறுதான் செயற்படுகிறது.

ஆனால், கரணம் தப்பாமல் இலங்கை இருக்கச் செய்யக்கூடியதை அனைவரும் செய்கிறார்கள். இந்தியா 1.9 பில்லியன் டொலர் அளவிலான பொருளாதார உதவியை வழங்கவிருப்பதாக அறிவித்திருக்கிறது. இது, இலங்கை இன்னும் ஒரு மாதத்துக்குப் பொருட்களை இறக்குமதி செய்வதற்குப் போதுமானது. எனவே, இப்போது மூச்சுவிடலாம்; ஆனால், உயிர்போகாது என்பதற்கு உத்தரவாதமில்லை.

சீனாவின் உரக் கப்பல் தொடர்பாக, இலங்கை - சீனா நாடுகளுக்கு இடையில் ஏற்பட்ட இராஜதந்திர முரண்பாடு, கடந்த இரண்டு தசாப்தகால இலங்கை - சீன உறவில் முக்கியமானதொரு புள்ளி. கொழும்பு துறைமுக நகரத் திட்டத்தை, நல்லாட்சி அரசாங்கம் இடைநிறுத்துவதாக அறிவித்த போது கூட, இருநாடுகளுக்கும் இடையில் இவ்வாறான மோசமான நிலைமை உருவாகவில்லை.

இலங்கையின் அயலுறவுக் கொள்கை வகுப்பில் பாரிய ஓட்டைகள் உண்டு. அது ஆட்சியாளர்களின் அக்கறையின்மையின் விளைவிலானது. மனித உரிமைகள் மீறல் குற்றச்சாட்டுகள் தொடர்பாக, பாரிய அழுத்தங்களை மஹிந்த ராஜபக்ஷ அரசாங்கம் கொண்டிருந்த போதும் கூட, அயலுறவுகளில் ஒருவித தெளிவு ஆட்சியாளர்களிடம் இருந்தது. இப்போது அந்த நிலை இல்லை. இலங்கை மீது செல்வாக்குச் செலுத்த விரும்பும் அயற்சக்திகள் இதை நன்கறிந்து, அதற்கேப காய்களை நகர்த்துகின்றன.

சீனா, வடக்குக்கு விஜயம் செய்கின்றது; இந்தியா, வடபுலத்து மீன்பிடி தொடர்பில் உரையாடுவற்கு, இலங்கையை அழைக்கிறது; அமெரிக்கா - ஒருபுறம், மனித உரிமைகள் மீறல்களில் ஈடுபட்ட இலங்கை இராணுவத்தினருக்குப் பயணத்தடை விதிக்கிறது. மறுபுறம், இலங்கையின் கடற்புலப் பாதுகாப்புக்கான இராணுவ உடன்பாட்டில் கையொப்பமிடுகிறது. இவ்வாறு, இலங்கையைச் சுற்றி விடயங்கள், கடந்த சில வாரங்களில் நடந்தேறியுள்ளன.

வடக்கு விஜயத்தின் போது, சீனத்தூதுவர் தலைமன்னாருக்கு விஜயம் செய்து, இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையில், பாலம்போல இருக்கின்ற மணல் திட்டுகளைப் பார்வையிட்டார். இது, இந்தியாவுக்கு நிச்சயம் எரிச்சலூட்டி இருக்கும்.

இன்னொரு வகையில், வடபிராந்தியத்தில் இந்தியாவின் ஏகபோகத்துக்குச் சவால்விடும் நிகழ்வு இது என்றும் கொள்ளலாம். இதற்கான பின்கதை, இவ்வாண்டுத் தொடக்கத்தில் உருவானது.

நெடுந்தீவு, நயினாதீவு, அனலைதீவு ஆகிய மூன்று தீவுகளில், சூரிய சக்தி மூலம் மின்சாரத்தை உற்பத்தி செய்யும் சூரியகலன்களைப் பொருத்தும் செயற்பாடுகள், சீன நிறுவனம் ஒன்றுக்கு வழங்கப்பட்டன. இதைத் தொடர்ச்சியாக எதிர்த்து வந்த இந்தியா, அதேபணியை இந்திய நிறுவனங்கள் மேற்கொள்ளும் என்று சொல்லியது.

இவ்விடயம் தொடர்ச்சியான இழுபறியில் இருந்த வேளை, நிதியமைச்சர் பசில் ராஜபக்ஷவின் இந்திய விஜயத்தின் போது, சீனாவுடனான ஒப்பந்தத்தை இரத்துச் செய்ய, இலங்கை உடன்பட்டதாகச் சொல்லப்படுகிறது. இதன் பின்னரே, 'வெளி அழுத்தம் காரணமாக, குறித்த உடன்படிக்கை இரத்துச் செய்யப்பட்டது' என சீனத் தூதரகம் தனது 'ட்டுவிட்டர்' பக்கத்தில் செய்தி வெளியிட்டது. இதைத் தொடர்ந்தே, சீனத் தூதுவரின் வடக்குக்கான பயணம் நடந்தேறியது.

இதேவேளை, கெரவலப்பிட்டி மின் உற்பத்தி நிலையத்தின் 40 சதவீதமான பங்குகளை, அமெரிக்க நிறுவனத்துக்கு விற்பனை செய்த அரசாங்கத்தின் முடிவானது, பலத்த எதிர்வினைகளை எதிர்நோக்குகிறது. பொதுமக்களுக்கோ, பாராளுமன்றத்துக்கோ அறிவிக்காமல், தன்னிச்சையாக எடுக்கப்பட்ட இம்முடிவானது, கடும் விமர்சனத்துக்கு ஆளாகியுள்ளது. அரசாங்கத்தில் உள்ள பங்காளிக் கட்சிகளே இம்முடிவை எதிர்க்கிறார்கள்.

இதேவேளை, குறித்த அமெரிக்க நிறுவனம், திரவப் பெற்றோலிய வாயுவிலிருந்து மின் உற்பத்தி செய்யும் இயந்திரங்களை, இரண்டாண்டுகளில் இங்கு நிறுவவுள்ளது. இதற்குத் தேவையான திரவப் பெற்றோலிய வாயு, மன்னார் கடற்படுக்கையில் இருந்து எடுக்கப்படவுள்ளது என்று அமைச்சர் உதய கம்மன்பில தெரிவித்துள்ளார். மன்னாரில் 267 பில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதியான எண்ணெயும் வாயுவும் இருப்பதாக ஆய்வுகள் உறுதிப்படுத்துவதாகவும் சொன்னார்.

2022ஆம் ஆண்டில் நடக்கவுள்ள நிகழ்வுகளுக்கான முன்னோட்டமாக, இதைக் கொள்ளவியலும். இங்கு, இரண்டு வினாக்கள் தொக்கி நிற்கின்றன. முதலாவது, இலங்கையின் பூகோள அரசியல் நெருக்கடியின் உடனடி விளைவுகள் என்ன? இரண்டாவது, வடபுலத்தின் மீதான அக்கறைகள் குறித்து, தமிழ் மக்கள் செய்யக் கூடியவை என்ன?

இலங்கையின் பொருளாதார நெருக்கடி, எவ்வாறு விரிவடையும் என்பதைப் பொறுத்தே, இலங்கை மீதான செல்வாக்கின் தன்மை தீர்மானிக்கப்படும். தற்போதைய அரசாங்கத்தின் மீது, சீனாவுக்கு முழுமையான நம்பிக்கையில்லை. கடந்த சில மாதங்களில், இலங்கையின் நடத்தை அதை உறுதிப்படுத்தி இருக்கிறது.


இந்தியாவை முழுமையாக வரித்துக் கொள்ள, இலங்கை தயாராக இருக்கின்றதா என்ற வினாவை, தலைகீழாகவே கேட்டாக வேண்டியுள்ளது. இலங்கையை முழுமையாக வரித்துக் கொள்ள, இந்தியா தயாராக இருக்கின்றதா, அதற்கான பொருளாதார பலத்துடன் இந்தியா இருக்கின்றதா என்பதை, தன்னைத்தானே இந்தியா கேட்டாக வேண்டும்.

அமெரிக்கா இராணுவ ரீதியில் இலங்கையில் செல்வாக்குச் செலுத்த விரும்புகிறது. ஆனால், அமெரிக்கா விரும்பாவிடினும், தூக்கிப் பிடித்துள்ள 'மனித உரிமைகள்' என்ற சிலுவை, இலங்கையின் ஆட்சி அதிகாரத்தில் செல்வாக்குச் செலுத்தும் இராணுவத்தினருக்கு உவப்பானதாக இல்லை.

இலங்கையின் நெருக்கடி, மோசமடையும் போது ஏற்படப்போகும் மக்கள் எதிர்ப்புகளை, அரசாங்கம் எவ்வாறு கையாளப் போகின்றது என்பதே இந்த உதவும் கரங்களின் நிலைப்பாடுகளைத் தீர்மானிக்கும்.

இலங்கை முழுமையாக, சீனாவின் கொலனியாகிவிடக் கூடாது என்பதில் அமெரிக்காவும் இந்தியாவும் ஜப்பானும் ஒரே நேர்கோட்டில் வந்தாலும், அரசாங்கத்துக்கு எதிரான எதிர்ப்புகளை அடக்க, இராணுவ வழிமுறையை இலங்கை தெரிவுசெய்யும் போது - அதற்கான வாய்ப்புகளே பிரகாசமாக உள்ளன. அதன்போது, இலங்கைக்குக் கைகொடுப்பது சிரமமாகலாம். அப்போது பிராந்திய நலனா, மனித உரிமைகளா என்றொரு கேள்வி இன்னொருமுறை மேலெழலாம்.

தமிழ் மக்களைப் பொறுத்தவரையில், தமிழ் மக்களுக்கான விடுதலையை, தமிழ் மக்களே வென்றாக வேண்டும். இதுவரை காலமும் இந்தியாவும் அமெரிக்காவும் இனப்பிரச்சினையை மையப்படுத்தியும் தமிழ் மக்களுக்கான தீர்வை மையப்படுத்தியும் ஆடிய பகடைக்காய்கள் இரத்தம் தோய்ந்து, வரலாறெங்கும் கொட்டிக் கிடக்கின்றன. எமது வரலாற்றிலிருந்து நாம் கற்ற பாடமென்ன என்பதை ஆழநோக்குவது, சீனா குறித்துச் சிந்திக்கவும் பயன்படும்.



## வாழ்வியல் தரிசனம்

காதல் பற்றிச் சிலர் பேசுவது நகைச்சுவையாக இருக்கும். காதலிப்பதே கௌரவத்தைத் தரும் என்று எண்ணும் இளைஞர்கள் அநேகர் உள்ளனர். இது குறித்து, நண்பர்களிடம் பெருமையாகப் பேசும் இவர்கள், காதல் எண்ணங்கள் இல்லாதவர்களிடம், "உங்களுக்கு காதலின் பெருமை பற்றித் தெரியுமா" என்பார்கள். சிலர் "உங்களை எல்லாம் எவர்தான் காதலிப்பார்கள்" என்று நாகரிகமின்றிப் பேசுவார்கள். காதல், கடையில் வாங்கும் சரக்குப் பண்டம் இல்லையே?

உண்மையான அன்பை வைத்திருப்பவர்கள், அதுபற்றிக் கண்டபடி பிரசாரம் செய்யமாட்டார்கள். தூய காதலானது, மௌனமாக வளர்ந்தபடி, இதயங்களால் பரிமாறிக் கொள்ளப்படுகின்றன.

குடும்பச்சுமையுடன் வாழும் இளைய தலைமுறையினர், தங்கள் திருமணம் பற்றி எண்ணுவது, அரிதான விடயம். பல இளம் பெண்கள், தங்கள் திருமண வாழ்வை மறந்து, தங்கள் குடும்பத்துக்கே தங்களை அர்ப்பணித்து வாழ்கின்றார்கள். பெண்களின் தியாகம் ஒப்பற்றது. சுயநலத்துக்காகக் காதல் கொள்வது அபத்தம்.

–பருத்தியூர் பால. வயிரவநாதன்

## கடிதங்கள்

### மூன்று மாதங்களாக வீதியில் தேங்கியுள்ள வெள்ளம்

கிண்ணியா நகரசபை எல்லைக்கு உட்பட்ட மாலிந்துறை பழைய தபால் கந்தோர் வீதியில், வெள்ளநீர் தேங்கி நிற்பதால், பொதுமக்கள் பல்வேறு அசௌகரியங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

கிண்ணியா பிரதேசத்தின் மத்திய பகுதியில் அமைந்துள்ள இவ்வீதியினூடாக மாணவர்கள், வியாபாரிகள், அரச உத்தியோகத்தர்கள், பொதுமக்கள் எனப் பலரும் பயணம் செய்கின்றனர்.

மாணவர்கள், உத்தியோகத்தர்கள் இவ்வீதியினூடாகச் செல்லும் போது, வெள்ளநீர் அவர்களது ஆடைகளை அழுக்கடையச் செய்வதாகவும் இதனால் பல்வேறு இன்னல்களை எதிர்கொள்வதாகவும் தெரிவிக்கின்றனர்.

அத்துடன், தேங்கிநிற்கும் நீரிலிருந்து டெங்கு நுளம்பு பரவும் அபாயம் காணப்படுவதாகவும் இரண்டு, மூன்று மாதங்களுக்கு மேலாக இவ்வாறு மழைநீர் தேங்கி, வடிந்தோட முடியாது நிற்பதாகவும் எவரும் இதைச் சீர்செய்ய வேண்டும் என்ற எண்ணம் இன்றி, மாற்று வீதியை பயன்படுத்துவதாகவும் விசனம் தெரிவிக்கப்படுகின்றது.

மாலிந்துறை மக்களின் பிரதான வீதியாகக் காணப்படும் இவ்வீதியில் குடியிருக்கும் பிரதேசவாசிகள் கூட, இவ்வீதியைப் பயன்படுத்துவதற்கு சிரமப்படுவதாகத் தெரிவிக்கின்றனர்.

எனவே, சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கவனம் செலுத்தி, உரிய நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும் என, பிரதேச மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

ஏ.ஆர். எம். றிபாஸ்



சென்னை:

உயர் நீதிமன்றத்தில் தமிழ்நாடு அரசு தகவல்:

# நளினிக்கு ஒரு மாதம் பரோல்



முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் ஆயுள் தண்டனை பெற்ற நளினி, சுமார் 30 ஆண்டுகளுக்கும் மேலாக சிறையில் இருந்துவருகிறார். இந்த நிலையில், நளினியின் தாயார் பத்மா, சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்திருந்தார்.

அவரது மனுவில், 'கடந்த இரண்டு மாதங்களுக்கு முன்பாக, எனது உடல்நிலை சரியில்லை; எனது மகள் நளினிக்கு பரோல் வழங்க வேண்டும் என்று அரசிடம் மனு கொடுத்திருந்தேன். மனு மீது இதுவரை எந்த நடவடிக்கையும் இல்லை. எனவே, நளினியை 30 நாள்கள் பரோலில் விடுவிக்க தமிழ்நாடு அரசுக்கு உத்தரவிட வேண்டும்' என்று கோரியிருந்தார்.

இந்த வழக்கு கடந்தமுறை சென்னை உயர் நீதிமன்றத்தில் விசாரணைக்கு வந்தது. அப்போது அரசுத் தரப்பில், நளினி பரோல் தொடர்பாக அவரது தாயார் அனுப்பிய மனுவானது பரிசீலனையில் உள்ளது எனத் தெரிவிக்கப்பட்டது. இதையடுத்து வழக்கு விசாரணை ஒத்திவைக்கப்பட்டது.

இதற்கிடையில் நளினியின் தாயார், தமிழ்நாடு முதலமைச்சரின் தனிப்பிரிவுக்கு மனு அளித்திருந்தார். இந்நிலையில், இவ்வழக்கு நேற்று (23) மீண்டும் விசாரணைக்கு வந்தபோது, அரசுத் தலைமைக் குற்றவியல் வழக்கறிஞர் ஜின்னா நேரில் ஆஜராகி, நளினியின் தாயார் மனு மீது தமிழ்நாடு அரசு பரிசீலித்து முடிவெடுத்துள்ளது. மேலும், நளினிக்கு 30 நாள்கள் பரோல் வழங்க தமிழ்நாடு அரசு முடிவு செய்துள்ளது. இதற்கான உத்தரவு நேற்று பிறப்பிக்கப்பட்டுள்ளது" என்றார். இதனையேற்ற நீதிபதிகள், நளினியின் தாயார் தொடர்ந்த வழக்கை முடித்துவைத்து உத்தரவிட்டனர்.

ஆலப்புழா

# கேரளாவில் பறவை காய்ச்சல்



கேரளாவில் பறவை காய்ச்சல் எதிரொலி காரணமாக, தமிழக, கேரள எல்லையான ஆனைகட்டியில் கால்நடை துறையினர், தீவிர கண்காணிப்பு பணியில் ஈடுபட்டு வருகின்றனர்.

கேரள மாநிலத்தில் ஆலப்புழாவில் சில பண்ணைகளில் கோழிகளுக்கு பறவைக் காய்ச்சல் நோய் இருப்பது சமீபத்திய பரிசோதனையில் தெரியவந்துள்ளது. இதையடுத்து, அப்பகுதியிலுள்ள வாத்துகள், கோழிகளை அழிக்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது.

தமிழகத்தில் பறவை காய்ச்சல் பரவுவதைத் தடுக்க, முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன. தமிழக, கேரள எல்லையான ஆனைகட்டி பஸ் நிலையத்தில் கேரளாவிலிருந்து வரும் வாகனங்கள் தீவிர கண்காணிப்புக்கு பிறகே அனுமதிக்கப்படுகின்றன. வாகனங்களுக்கு போதுமான அளவு மருந்து தெளித்து, உரிய அறிவுரைகள் அதிகாரிகளால் வழங்கப்படுகின்றன.

தமிழக கால்நடை துறையினர் கூறுகையில், "கோழிப்பண்ணைகளில் திடீரென அதிகப்படியான கோழிகள் இறந்தால், அது குறித்து உடனடியாக கால்நடை துறைக்கு தகவல் தெரிவிக்க வேண்டும். கோழிப் பண்ணைகளை, சுத்தமாக வைத்துக்கொள்ள வேண்டும். ஒரு முறை பறவை காய்ச்சல் வந்தால், அதன் பாதிப்பு ஆறு மாத காலம் இருக்கும். இதனால் தொடர்ந்து முன்னெச்சரிக்கையுடன் பண்ணையாளர்கள் இருக்க வேண்டும். தமிழகத்தில் இதுவரை பறவைக் காய்ச்சல் பாதிப்பு கண்டறியப்படவில்லை" என்றனர்.

அரியானா

# 21 வயதில் மது அருந்தலாம்

அரியானா மாநிலத்தில், மது அருந்துவதற்கான வயது 21 ஆக குறைக்கப்பட்டுள்ளது. மது அருந்தும் வயது குறைந்தபட்சம் 25 ஆக இருக்க வேண்டும் என்று சட்டம் இருந்தது. 25 வயதுக்கு மேற்பட்டவர்களுக்குத் தான் மது விற்கவேண்டும் என்ற கட்டுப்பாடும் அங்கு இருந்தது.

இந்த நிலையில், அரியானாவில் மது அருந்துவதற்கான குறைந்தபட்ச வயது 25இல் இருந்து 21 ஆக குறைத்து, சட்டத்திருத்த சட்டமூலம் சட்ட சபையில் நிறைவேற்றப்பட்டுள்ளது.

மக்கள் இப்போது கல்வி அறிவு பெற்றவர்களாகவும் குடிப்பழக்கம் குறித்த பகுத்தறிவு கொண்டவர்களாகவும் இருப்பதால் இவ்வாறு வயது குறைக்கப்பட்டதாக சட்டமூலத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

சமீபத்தில், புதுடெல்லியில் போதை பொருட்கள் பயன்படுத்துவதற்கும் மற்றும் விற்பதற்குமான வயது வரம்பு 21 ஆக குறைக்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

திருப்பூர்:



# சிறுவனின் உயிர் குடித்த 'ஃப்ரீ பயர்'

திருப்பூர் மாவட்டம், பெருமாநல்லூர் அருகே கண்ணன் (வயது-13) என்ற மாணவன் எட்டாம் வகுப்பு படித்து வந்தான். தனது வீட்டில் நேற்று முன்தினம் (22) 'ஃப்ரீபயர்' விளையாடி கொண்டிருந்துவிட்டு, திடீரென அறைக்குள் சென்று தூக்கிட்டு கொண்டான்.

உடனடியாகப் பெற்றோர், கண்ணனை மீட்டு மருத்துவமனைக்கு கொண்டு சென்றனர். அங்கு கண்ணனை பரிசோதித்த மருத்துவர்கள், ஏற்கெனவே அவன் உயிரிழந்துவிட்டதாக தெரிவித்தனர். 'ஃப்ரீபயர்' விளையாடியதில் ஏற்பட்ட மன அழுத்தம் காரணமாக, சிறுவன் இவ்வாறு செய்து கொண்டதாக, முதற்கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

திருநெல்வேலி:

ஆடையின்றி நடுவீதியில் நடந்த மனநலம் குன்றியவரின்

# மானம் காத்த மாதரசி



திருநெல்வேலி மாவட்டம், கங்கைகொண்டானை சேர்ந்தவர் நந்தினி. இவர் சிப்காட் அருகே, மோட்டார் சைக்கிளில் வந்து கொண்டிருந்தபோது, நான்கு வழிச் சாலையின் நடுவில், மனநலம் பாதிக்கப்பட்ட ஒருவர் உடையின்றி நடந்து வருவதைப் பார்த்துள்ளார்.

உடலில் ஒரு சிறிய துணி கூட இல்லாமல் அவரை பார்த்த நிலையில், நந்தினிக்கு அவர் மீது இரக்கம் ஏற்பட்டது. உடனே, தனது வாகனத்தை நிறுத்திவிட்டு, அதில் ஒரு பட்டு துணி போன்ற சால்வை இருந்தது. அதை எடுத்து, அந்த நபரிடம் சிறிதும் தயக்கமுமின்றி சென்றார். அவரது இடுப்பில் அந்தப் பச்சை நிற சால்வையை வேட்டி போல் கட்டிவிட்டார்.

பின்னர், அங்கிருந்த ஒரு கல்லில் அவரை உட்கார வைத்துவிட்டு, அருகில் இருந்த சிறிய உணவகத்துக்குச் சென்று, உணவுப் பார்சல் வாங்கி வந்து, மனம் நலம் குன்றிய அந்த நபருக்கு ஊட்டிவிட்டார். தாயை போல் அந்த நபருக்கு நந்தினி காட்டிய அன்பை அங்கிருந்தவர்கள் அலைபேசியில் படம்பிடித்திருந்தார்கள். ஆண்களே செய்ய விரும்பாத ஒரு காரியத்தை பெண்ணாக இருந்து கொண்டு செய்ததை அடுத்து, நந்தினிக்கு பாராட்டுகள் குவிகின்றன.

உறவினர்கள் கைவிட்டுவிடுவதால், ஆதரவு இன்றி சாலைகளில் இருக்கும் மனநலம் குன்றியவர்களைக் கேலி பொருளாகப் பார்க்கும் பலரின் மத்தியில், அவர்களும் மனிதர்கள், அவர்களுக்கும் உணர்ச்சிகள் இருக்கின்றன என்பதை உணர்ந்து செயற்படுவது மனிதாபிமானத்தின் அடிப்படை எனலாம்.

புதுடெல்லி:

# கிறிஸ்துமஸ், புத்தாண்டு கொண்டாட்டங்களுக்கு தடை

ஒமிக்ரான் அச்சுறுத்தலை கருத்தில் கொண்டு புதுடெல்லியில் பொது இடங்களில் கூடவும், கிறிஸ்துமஸ், புத்தாண்டு கொண்டாட்டங்களுக்கும் தடை விதித்து புதுடெல்லி மாநில பேரிடர் மேலாண்மை ஆணையம் உத்தரவிட்டுள்ளது.

இந்தியாவில் இதுவரை 200 க்கும் மேற்பட்டவர்களுக்கு ஒமிக்ரான் தொற்று பல மாநிலங்களில் உறுதி செய்யப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

ஸ்டார் காமென்ட்ஸ் குரூப்புக்கு

# ஆறு LEED சான்றுகள்



ஸ்டார் காமென்ட்ஸ் குரூப்பின் (ஸ்டார்) மூன்று உற்பத்தி தொழிற்சாலைகளுக்கு அமெரிக்காவின் கிறீன் பில்டிங் கவுன்சிலின் (USGBC), *Leadership in Energy and Environmental Design (LEED)* சான்றிதழ் வழங்கப்பட்டுள்ளதாக அறிவித்துள்ளது. இந்நிறுவனம் நிலைபேறாண்மையான செயற்பாடுகளை முன்னெடுப்பதுடன், அதனூடாக நேர்த்தியான சமூக தாக்கத்தை ஏற்படுத்தும் பணிகளை மேற்கொண்டு வருகின்றது.

புத்தலவில் அமைந்துள்ள ஸ்டார் காமென்ட்ஸ் தொழிற்சாலைக்கு *LEED Gold* மற்றும் கடுவளை மற்றும் பத்தேகம ஆகிய பகுதிகளில் அமைந்துள்ள ஸ்டார் ஃபஷன் குளோதிங் ஆகியவற்றுக்கு *LEED Silver* ஆகிய சான்றிதழ்கள் வழங்கப்பட்டுள்ளன. இவற்றுடன், ஸ்டார் காமென்ட்ஸ் குழுமம் பெற்றுக் கொண்டுள்ள மொத்த *LEED* சான்றுகளின் எண்ணிக்கை ஆறு ஆகும். இந்த மூன்று சான்றுகளுடன் குழுமம் தற்போது *2 LEED Platinum, 2 LEED Gold* மற்றும் *2 LEED Silver* சான்றிதழ்களை தனது தொழிற்சாலை வலையமைப்பில் கொண்டுள்ளது. 2024 ஆம் ஆண்டளவில் குழுமம் சகல 14 உற்பத்தி ஆலைப் பகுதிகளுக்கும் சான்றிதழைப் பெற்றுக் கொள்ளும் நோக்கத்துடன் செயலாற்றி வருகின்றது.

கட்டுநாயக்கவில் அமைந்துள்ள ஸ்டார் இனோவேஷன் சென்ரர் *LEED version 4* என்பதற்கமைவாக இலங்கையில் சான்றிதழைப் பெற்றுக் கொண்ட முதலாவது *LEED Platinum* கட்டடமாக அமைந்திருப்பதுடன், தெற்காசிய பிராந்தியத்தில் முதலாவது *'Passive House Design'* ஆகவும் அமைந்துள்ளது. பாரம்பரிய கட்டடங்களுடன் ஒப்பிடுகையில் 70 சதவீதத்துக்கும் அதிகமான ஒட்டுமொத்த வலுக்குறைப்பைக் கொண்ட, அல்ட்ரா சிக்கனமான, உயர் வினைத்திறனைக் கொண்ட கட்டடத்தைக் கொண்டிருப்பதை உறுதி செய்துள்ளது. நிலைபேறாண்மை பிரிவில் 2020 AIA New York (AIANY) Merit விருதையும் பெற்றிருந்தது.

வலு வினைத்திறன், நீர் வினைத்திறன், வெளியேற்றக் குறைப்புகள், மேம்படுத்தப்பட்ட உள்ளக வளித் தரம், வளங்கள், முகாமைத்துவம் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு வடிவமைக்கப்பட்டு நிர்மாணிக்கப்பட்டுள்ள கட்டடங்களுக்கு *LEED* சான்றிதழ்கள் வழங்கப்படுகின்றன.

*USGBC* இன் *LEED* சான்றளிப்பு என்பது ஆழமான விவரங்களை உள்ளடக்கிய நியமங்கள், வழிகாட்டல்களைக் கொண்டிருப்பதுடன், புள்ளி வழங்கல் பிரிவின் அடிப்படையில் நிலைபேறான பகுதிகள், நீர் வினைத்திறன், வலு சூழலமைவு, மூலப்பொருட்கள், வளங்கள், உள்ளக சூழலின் தரம் ஆகிய ஐந்து பிரிவுகளின் அடிப்படையில் இதற்கான தகைமை வழங்கப்படுகின்றது.

*CarbonNeutral* என்பதன் கீழ் சான்றளிக்கப்பட்ட இலங்கையின் முதலாவது ஆடை உற்பத்தி குழுமத்தின் அங்கமாக ஸ்டார் திகழ்கின்றது. இந்தச் சான்றிதழை உலகின் முன்னணி காபன் சான்றிதழ் வழங்கும் இயற்கை மூலதன *Natural Capital* பங்காளர்களால் வழங்கப்படுகின்றது. சகல தொழிற்சாலைகளினதும் பச்சை இல்ல வாயு வெளியேற்றம் தொடர்பான சுயாதீன மதிப்பாய்வுகளை தொடர்ந்து இந்தச் சாதனை பெறப்படுகின்றது. 2020 ஆம் ஆண்டில் 14 வியாபார அலகுகளிலுமிருந்து 17,581.09tC02e கள் கட்டுப்படுத்தப்பட்டிருந்தன. 2021 ஆம் ஆண்டில், குழுமத்தினால் அதன் காபன் வெளியேற்றத்தை 14,474 tC02e ஆக கட்டுப்படுத்திக் கொள்ள முடிந்ததுடன், இவற்றை சீரமைப்பதனூடாக நிகர பூஜ்ஜிய காபன் அர்ப்பணிப்பும் உறுதி செய்யப்பட்டிருந்தது.

அதிகம் நேசிக்கப்படும் நிறுவனங்கள் வரிசையில்

# CBL குழுமம்



இலங்கையில் அதிகளவு நேசிக்கப்படும் சிறந்த 10 நிறுவனங்கள் வரிசையில் *CBL* குழுமம் தொடர்ச்சியாக 3ஆவது வருடமாகவும் உள்வாங்கப்பட்டிருந்தது. பட்டைய முகாமைத்துவ கணக்காளர்கள் கல்வியகம் (*CIMA*) மற்றும் இலங்கை சர்வதேச வர்த்தக சம்மேளனம் (*ICCSL*) ஆகியன இணைந்து இந்தத் தரப்படுத்தலை மேற்கொண்டிருந்தன. பொதுப் பட்டியலிடப்பட்ட மற்றும் பட்டியலிடப்படாத நிறுவனங்களின் உறுதியான செயற்பாடுகள் மற்றும் நிதிசார் நடவடிக்கைகள் போன்றவற்றுக்காகவும், நுகர்வோர்கள், பங்காளர்கள், ஊழியர்கள் எனப் பரந்த தரப்பினருக்கு பெறுமதி சேர்ப்பதற்காக கௌரவிக்கும் வகையில் அமைந்துள்ளது.

நெருக்கடியான சூழலில் நிறுவனங்கள் எவ்வாறு தம் செயற்பாடுகளை முன்னெடுத்திருந்தன மற்றும் மீட்சியை பதிவு செய்திருந்தன என்பது தொடர்பில் இந்த ஆண்டில் விருதுகள் வழங்கும் போது கவனம் செலுத்தப்பட்டிருந்தது. சர்வதேச ரீதியில் ஏற்றுக் கொள்ளப்பட்ட விதிமுறைகளைப் பின்பற்றி நடுவர்கள் மதிப்பாய்வுகளை மேற்கொண்டிருந்தனர். நிதிப் பெறுபேறுகள் மாத்திரமன்றி, நுகர்வோர், பங்காளர்கள், ஊழியர்கள் மற்றும் பரந்தளவு சமூகத்துக்கு பெறுமதி உருவாக்கத்தில் ஆற்றியிருந்த பங்களிப்பு பற்றியும் கவனம் செலுத்தியிருந்தனர்.

குழும முகாமைத்துவ பணிப்பாளர் ஷியா விக்ரமசிங்க கருத்துத் தெரிவிக்கையில், "*CBL* தயாரிப்புகள் நாடு முழுவதையும் சேர்ந்த நுகர்வோர் மத்தியில் விநியோகிக்கப்பட்டிருந்தன. குறிப்பாக தொற்றுப் பரவல் காலப்பகுதியில் எமது உற்பத்தி நடவடிக்கைகளை தொடர்ந்து முன்னெடுக்கப்படுவதையும், நுகர்வோரை அவை சென்றடைவதையும் உறுதி செய்யும் பணிகளை நாம் மேற்கொண்டிருந்தோம். *CBL* பெறுமதி சங்கிலியைச் சேர்ந்த ஒவ்வொரு பங்காளர்களினாலும் எமது வளர்ச்சிக்கு பங்களிப்பு வழங்கப்படுவதுடன், தொற்றுப் பரவல் காலப்பகுதியில், பங்காளர்களுக்கு உறுதியான வாழ்வாதாரம் காணப்படுவது மற்றும் வளர்ச்சி வாய்ப்புகளை தொடர்ந்து பெற்றுக் கொள்வதற்கு பாரிய பங்களிப்பை வழங்க வேண்டிய தேவையை *CBL* கொண்டிருந்தது என்பதை நாம் அறிந்திருந்தோம். எமது தயாரிப்புகள் ஒவ்வோர் இலங்கையரின் இல்லத்தையும் சென்றடைவதுடன், உலகளாவிய ரீதியில் 60க்கும் அதிகமான நாடுகளுக்கும் செல்கின்றன. நெருக்கடியான சூழலிலும், எமது சகல வாடிக்கையாளர்களுக்குமான பொறுப்புகளை நாம் தொடர்ச்சியாக நிறைவேற்றுவதை *CBL* அணியினர் உறுதி செய்தனர்" என்றார்.

மீளாய்வுக்குட்படுத்தப்பட்ட ஆண்டில், தொற்றுப் பரவலுடனான சூழலிலும், குழுமம் சிறப்பாக செயலாற்றியிருந்ததுடன், அதில் 6,000 க்கும் அதிகமான பணியாளர்களின் அர்ப்பணிப்பான நடவடிக்கைகள் முக்கிய பங்காற்றியிருந்ததாக ஷியா குறிப்பிட்டார்.

புதிய வழமையைப் பின்பற்றி சகல செயற்பாடுகளையும் முன்னெடுப்பதற்கு அனைவரையும் வழிநடத்துவது என்பது குழுமத்தின் சகல துணை நிறுவனங்களாலும் பிரதானமாக கவனம் செலுத்தப்படும் அம்சமாக அமைந்திருப்பதாக அவர் மேலும் குறிப்பிட்டார். ஊழியர்களுக்கு முக்கியத்துவமளித்து செயலாற்றுவது என்பது *CBL*'இன் பணியிட கலாசாரத்தை மேலும் வலுப்பெறச் செய்துள்ளது. *CBL* தனது செயன்முறைகளை வலுப்படுத்துவது தொடர்பில் கவனம் செலுத்தும் அதேவேளை, இந்தப் பெருவாரியான சவால்களுக்கு ஊழியர்கள் முகங்கொடுப்பதற்கு எவ்வாறு அவர்களுக்கு ஆதரவு வழங்குவது என்பது தொடர்பிலும் கவனம் செலுத்தப்படுகின்றது.

2020/21 பருவ காலப்பகுதியில் விவசாய உற்பத்திகளை கொள்வனவு செய்வதற்காக தனது பெறுமதி சங்கிலியைச் சேர்ந்த பங்காளர்களுக்கு ரூ. 5 பில்லியனுக்கு அதிகமான தொகையை செலுத்தியுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

ஈ.எஃப்.எல் கிண்ணத் தொடர்:

# லெய்செஸ்டரை வென்று அரையிறுதியில் லிவர்பூல்



இங்கிலாந்து கால்பந்தாட்ட லீக் (ஈ.எஃப்.எல்) கிண்ணத் தொடரின் அரையிறுதிப் போட்டிக்கு லிவர்பூல் தகுதி பெற்றுள்ளது.

விலகல் முறையிலான இத்தொடரில், லிவர்பூலின் மைதானத்தில் நேற்று அதிகாலை நடைபெற்ற லெய்செஸ்டர் சிற்றியுடனான காலிறுதிப் போட்டியில் வென்றே அரையிறுதிப் போட்டிக்கு லிவர்பூல் தகுதி பெற்றுள்ளது.

**“ வழமையான நேரத்தில் 3–3 என்ற கோல் கணக்கில் சமநிலையில் முடிவடைந்திருந்த நிலையில், பெனால்டியில் 5–4 என்ற ரீதியிலேயே லிவர்பூல் வென்றிருந்தது**

இப்போட்டியின் வழமையான நேரத்தில் போட்டியானது 3–3 என்ற கோல் கணக்கில் சமநிலையில் முடிவடைந்திருந்த நிலையில், பெனால்டியில் 5–4 என்ற ரீதியிலேயே லிவர்பூல் வென்றிருந்தது.

லிவர்பூல் சார்பாக, அலெக்ஸ் ஒக்ஸ்லேட்–சம்பர்லின், டியோ ஜோட்டா, தகுமி மினமினோ ஆகியோர் தலா ஒவ்வொரு கோலைப் பெற்றதோடு, லெய்செஸ்டர் சார்பாக ஜேமி வார்டி இரண்டு கோல்களையும், ஜேம்ஸ் மடின்ஸன் ஒரு கோலையும் பெற்றனர்.



## கரப்பந்தாட்ட டாஷ் கேமை ஊக்குவிக்க திட்டம்

■ எம்.யூ.எம். சனூன்

இலங்கையின் தேசிய விளையாட்டான கரப்பந்தாட்டத்தை அதற்கே உரித்தான டாஷ் கேம் பாணியிலே புத்தளம் நகரில் ஊக்குவிக்கும் முயற்சியை புத்தளம் ஸ்போர்ட்ஸ் மைன்ட் அமைப்பும், நேச்சர் விளையாட்டு கழகமும் இணைந்து ஆரம்பித்துள்ளன.

புத்தளம் நகருக்குள் கரப்பந்தாட்ட விளையாட்டுக் கலாச்சாரத்தை உருவாக்குவதும், இன்றைய இளைஞர்களை தேசிய மற்றும் சர்வதேச வீரர்களாக மாற்றுவதுமே இதன் நோக்கமாகும்.

ஓவர் கேம் விளையாட்டு என்பது போட்டிகளிலே பங்குபற்ற முடியாத ஒன்று என்பதை கருத்திற் கொண்டே டாஷ் கேம் விளையாட்டை ஊக்கமளிக்க தீர்மானித்ததாக ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.

இதற்கென புத்தளம் புழுதிவயல் அல் பலாஹ் கரப்பந்தாட்ட அணியின் வீரரான முஹம்மது நஸ்ரின் பயிற்சியாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.



## 3ஆவது ஆஷஸ் டெஸ்டிலும் ஹேசில்வூட் இல்லை

இங்கிலாந்துக்கு எதிரான மூன்றாவது ஆஷஸ் டெஸ்ட் போட்டியிலும் உபாதைக்குள்ளான அவுஸ்திரேலியாவின் வேகப்பந்துவீச்சாளர் ஜொஷ் ஹேசில்வூட் விளையாட மாட்டார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

எவ்வாறெனினும், இரண்டாவது டெஸ்டில் உபாதைக்குள்ளான இன்னொரு அவுஸ்திரேபிய வேகப்பந்துவீச்சாளரான மிற்செல் ஸ்டார்க் மூன்றாவது போட்டியில் விளையாடுவார் எனக் கூறப்படுகிறது.

தவிர, முதலிரண்டு டெஸ்ட்களிலும் ஓட்டங்களைப் பெற்றிருக்காத அவுஸ்திரேலியாவின் ஆரம்பத் துடுப்பாட்டவீரரான மார்க்கஸ் ஹரிஸும் மூன்றாவது போட்டியில் விளையாடுவார் என அவுஸ்திரேலிய அணியின் பயிற்சியாளர் ஜஸ்டின் லாங்கர் உறுதிப்படுத்தியுள்ளார்.

நுவரெலியா விளையாட்டுக் கழகத்தின் ஏற்பாட்டில்

## விளையாட்டு போட்டிகள்

■ டி. ஷங்கீதன்

நுவரெலியா விளையாட்டுக் கழகத்தின் ஏற்பாட்டில் நேற்று முன்தினம் மாலை நடைபெற்ற ஸ்னூக்கர் போட்டியில் முதலாமிடத்தை சமிந்த கொடிகாரவும், இரண்டாமிடத்தை நிமால் அபேநாயக்கவும் பெற்றனர். 36 விளையாட்டு வீரர்கள் பங்குபற்றிய இப்போட்டியின் இறுதிப் போட்டியில் 40 - 20 என்ற புள்ளிகள் அடிப்படையில் கொடிகார வெற்றி பெற்றார்.

34 போட்டியாளர்கள் பங்குபற்றிய பில்லியட்ஸ் போட்டியின் இறுதிப் போட்டியில் 48 - 40 என்ற புள்ளிகள் அடிப்படையில் முதலாமிடத்தை எம்.டி. பூசோவும், இரண்டாமிடத்தை சஞ்ஜீவ ஹேரத்தும் பெற்றனர்.

12 விளையாட்டு வீரர்கள் பங்குப்பற்றிய மேசைப்பந்துப் போட்டியில் முதலாமிடத்தை யசித்த பிட்டிகலவும், இரண்டாமிடத்தை அருண சாந்த ஹெட்டியாராச்சியும் பெற்றனர்.






தேசிய கராத்தே போட்டியில்

## தென்கிழக்கு பல்கலைக்கழகத்துக்கு 5 பதக்கங்கள்

■ அஸ்ஹர் இப்றாஹிம்

இலங்கை தேசிய கராத்தே போட்டியானது பண்டாரகம உள்ளக அரங்கில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

21 வயதுக்கும் மேற்பட்ட சிரேஷ்ட, 21 வயதுக்கும் கீழ்ப்பட்ட பிரிவினர்களுக்கிடையில் கிலோ கிராம் அடிப்படையில் நடைபெற்ற போட்டியில் ஒன்பது மாகாணங்களிலிருந்தும் இருந்து போட்டியாளர்கள் கலந்துகொண்டனர்.

இதில், கிழக்கு மாகாண கராத்தே சம்மேளன தலைவரும் ஐ.எம்.ஏ சங்கத் தலைவருமான முகம்மத் இக்பாலால் பயிற்சி வழங்கப்படுகின்ற தென்கிழக்கு பல்கலைக்கழக மாணவர்களான ரீ.ஐ.எஸ். பீரீஸ், எச்.எம். ஸசீன் ஆகியோர் வெள்ளிப் பதக்கங்களையும், டபிள்யு.ரீ.ஏ. சந்தரூவன், எம்.எச். முர்சிதீன், டி.எம். கே.எஸ். திசநாயக ஆகியோர் வெண்கலப் பதக்கங்களையும் பெற்றுக் கொண்டனர்.

மடகஸ்கார்

12 மணி நேரம் கடலில் நீந்தி

# உயிர்பிழைத்த அமைச்சர்

ஆபிரிக்க நாடான மடகஸ்காரில் ஹெலிகொப்டர் விபத்துக்குள்ளான நிலையில், அதில் பயணித்த அமைச்சரொருவர் 12 மணி நேரம் கடலில் நீந்தி உயிர்பிழைத்துள்ள சம்பவம் அந்நாட்டில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

செர்ஜி கெல்லே என்ற அமைச்சரே இவ்வாறு கடலில் நீந்தி உயிர்பிழைத்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்நாட்டின் வடகிழக்கு பகுதியில் சட்டவிரோதமாக பயணிகளை ஏற்றிச் சென்ற சரக்கு கப்பல் கவிழ்ந்த விபத்தில்,அண்மையில் 64 பேர் உயிரிழந்தனர். மேலும், 20க்கும் மேற்பட்டோர் மாயமாகினர்.

‘இந்நிலையில், இப் விபத்து நிகழ்ந்த இடத்தை பார்வையிட



சென்ற போதே குறித்த அமைச்சர் பயணித்த செர்ஜி கெல்லே ஹெலிகொப்டர் விபத்துக்குள்ளாகியுள்ளது.

இதனையடுத்து ஹெலிகொப்டரின் இருக்கையைப் படகு போல பயன்படுத்தி கடலில் நீந்தி அவர் கரையை அடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இது குறித்து பேசிய அமைச்சர், தான் மரணமடையும் நேரம் இன்னும் வரவில்லை என குறிப்பிட்டுள்ளார்.

சீனா

## ஆச்சரியத்தில் ஆழ்த்தும் டைனோசர் முட்டை

சீனாவின் கான்ச்சோ (Ganzhou) பகுதியில் கரு உருமாறாத முட்டையொன்றை தொல்பொருள் ஆராய்ச்சியாளர்கள் கண்டுபிடித்துள்ளனர்.





இம் முட்டையானது குறைந்தது 66 மில்லியன் ஆண்டுகளுக்கு முன்பிலிருந்தே அங்கு இருந்திருக்கலாம் என்றும் இறகுகள் கொண்ட டைனோசர் வகையிலிருந்து இம் முட்டை வந்திருக்கலாம் என்றும் கூறப்படுகின்றது.

மேலும் இத்தகைய டைனோசர்கள், இக்காலப் பறவைகளுடன் நெருங்கிய தொடர்பு கொண்டவை என்று நம்பப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.



வீரச் சிறுவனுக்கு

## 30 ‘ஸ்பைடர் மேன்’ அளித்த பரிசு

நாயின் தாக்குதலில் இருந்து தனது 4 வயதான தங்கையை 6 வயதான சிறுவனொருவன் காப்பாற்றிய சம்பவம் கடந்த வருடம் அமெரிக்காவில் இடம்பெற்றது.

இச்சம்பவத்தின் போது பிரிஜர் வாக்கர் என அழைக்கப்படும் குறித்த சிறுவனின் முகத்தை அந்நாய் கடுமையாகத் தாக்கியுள்ளது.

இதனால் அவனது முகத்தில் 90 தையல்கள் போடப்பட்டன. இச்சம்பவம் குறித்து வெளியான வீடியோவானது சமூக வலைத்தளங்களில் பலரது கவனத்தை ஈர்த்தது.

இந்நிலையில் அவனது வீரச் செயலுக்குப் பரிசளிக்கும் விதமாக ‘ ‘ஸ்பைடர் மேன்’ திரைப்படக் கதாநாயகன் டாம் ஹாலண்ட், பிரிஜரைத் புதிய *Spider-Man: No Way Home* என்ற படப்பிடிப்புக்கு வர அழைப்பு விடுத்திருந்தார்.

அத்துடன் பிரிஜருடன் *Spider-Man* உடையில் நடிகர் ஹாலண்ட் பழகுவதைப் படமெடுத்து அச்சிறுவனின் தந்தை வாக்கர் அண்மையில் தமது இன்ஸ்டாகிராம் பக்கத்தில் பதிவேற்றினார்.

இப்புகைப்படமானது தற்போது இணையத்தில் வைரலாகி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## அந்தரங்க உறுப்பில் 278 துளைகள்

ஜேர்மனி

நபரொருவர் தனது அந்தரங்க உறுப்பில் 278 துளைகளைப் போட்டுள்ளதாகத் தெரிவித்துள்ள விடயம் ஆச்சரியத்தை ஏற்படுத்தியுள்ளது.





61 வயதான ரோல்ஃப் பச்சோல்ஸ் என்பவரே இச்செயலில் ஈடுபட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜேர்மனியைச் சேர்ந்த இவர் இதற்கு முன்னர் உடலில் பல துளைகளைப் போட்டு அதில் ஆபரணம் அணிந்து கொண்டமைக்காகக் கின்னஸ் சாதனை புத்தகத்தில் இடம்பிடித்தவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில் இது குறித்து அவர் பிரபல ஊடகமொன்றிற்கு அளித்த செவ்வியில் “எனக்கு 40 வயதான போதே எனது உடலில் மாற்றங்களை செய்துகொள்ள விரும்பினேன். இதனால் 90% உடல் முழுவதும் பச்சை குத்திக் கொண்டுள்ளதோடு, மேலும் உடலில் ஆங்காங்கே துளைகளை இட்டு அதில் உலோகத்தாலான ஆபரணங்களை அணிய ஆரம்பித்தேன்.

அதுமட்டுமில்லாது உதட்டில் மாத்திரம் 94 துளைகளையும் எனது ஆணுறுப்பில் 278 துளைகளையும் போட்டுள்ளேன்.

இதனால் என்னுடைய அந்தரங்க வாழ்க்கைக்கு எந்தப் பாதிப்பும் ஏற்படவில்லை. என்னுடைய உடலில் இருக்கும் மாற்றங்கள் அனைத்தும் வெளியில் மட்டும்தான். இது எந்த விதத்திலும் என்னுடைய பாலியல் வாழ்க்கையைப் பாதிக்கவில்லை” என்றார்.

அவரது கருத்து பலரையும் ஆச்சரியத்தில் ஆழ்த்தியுள்ளது.

சீனா

## விந்தணுவில் தேநீர் கோப்பை; விரைவில் விற்பனை

சால்மன் எனப்படும் ஒருவகை மீனின் விந்தணுக்களைப் பயன்படுத்தி தேநீர்க் கோப்பைகளைத் தாயாரிக்கும் முயற்சில் சீனாவிலுள்ள டியான்ஜின் பல்கலைக்கழக விஞ்ஞானிகள் ஈடுபட்டு வருகின்றனர்.

பிளாஸ்டிக் பொருட்களினால் ஏற்படும் சூழல் மாசடைவதைத் தடுக்கவே இவ்வகை மீனின் விந்தணுக்களிலுள்ள *DNA*வைக் கொண்டு சில இரசாயனங்களை கலந்து பயோபிளாஸ்டிக் கப்களை உருவாக்கும் முயற்சியில் விஞ்ஞானிகள் இறங்கியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் இவற்றை எளிதாக மறுசுழற்சி செய்து மீண்டும் பயன்படுத்தலாம் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

மேலும் இது குறித்து கருத்துத் தெரிவித்த விஞ்ஞானிகள், பயோ பிளாஸ்டிக்குகள் சோள மா, மரத்தூள், உணவுக் கழிவுகள் போன்றவற்றிலிருந்து தயாரிக்கப்படுகின்றன என்றனர்.



## ஒமிக்ரானிடமிருந்து யாரும் தப்பிக்க முடியாது



உலக நாடுகள் ஒமிக்ரான் தொற்றிடமிருந்து தப்பிக்கவே முடியாது என உலக சுகாதார ஸ்தாபனம் அதிர்ச்சித் தகவலை வெளியிட்டுள்ளது.

தென்ஆபிரிக்காவில் கடந்த மாதம் கண்டறியப்பட்ட ‘ஒமிக்ரான்’ தொற்றனது உலகம் முழுவதும் மக்களிடையே பெரும் அச்சத்தை ஏற்படுத்தி வருகின்றது.

இதனால் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக பல நாடுகள் பூஸ்டர் தடுப்பூசி செலுத்தும் பணியில் தீவிரமாக ஈடுபட்டு வருகிறன.

இந்நிலையில் நேற்று முன்தினம் செய்தியாளர்களைச் சந்தித்த உலக சுகாதார ஸ்தாபனத்தின் தலைவர் டெட்ரோஸ் அதானோம், ”முன்னெச்சரிக்கை நடவடிக்கை எதுவும் எடுக்காமல் பூஸ்டர் தடுப்பூசியை மாத்திரமே நம்பி திட்டமிடப்பட்ட கொண்டாட்டங்களை நோக்கி உலக நாடுகள் சென்று கொண்டிருக்கின்றன. இதனால் ஒரு நாடும் கொரோனா பெருந்தொற்றிலிருந்து தப்பிக்கவே முடியாது” என்றார்.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் வெள்ளிக்கிழமை, 24 டிசெம்பர் 2021, இல. 08, ஹுணுபிட்டி குறுக்கு வீதி, கொழும்பு-02 இல் வடிவமைக்கப்பட்டு இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.